ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்
திங்கள்தோறும் வெளிவருவது.

சிலம்பு ௭	மெய்கண்டான்யாண்டு-௭௱௬ ஆனித்திங்கள் 1929௵ ஜூன்௴—ஜூலை௴	பரல் ௬

திருச்சிற்றம்பலம்

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ.

உரை:

சம்பந்தர்.

மடை, நீர் நிரம்பிய மடுவு; மாதரார் பொய்கையி லிறங்கி நீர் விளையாடலின், 'குடையும் பொய்கை'யென்றார்; பொய்கையிலுள்ள வாளை மீன்கள் அங்கருகிலுள்ள மடையிற் பாய்தலின், மாதரார் பொய்கையிற் குடைந்தன ரென்க. சாம்பற் பூச்சு, திருநீற்றுப் பூச்சு; கீழ், இடுப்பை யுணர்த்திற்று. 'கோலக்காவுளான் கொண்டவுருவ மென்கொலோ' வென்க. கொல்லும் ஓவும் ஐயமும் அசையுமாம்.

பெண்டான் பாக மாகப் பிறைச்சென்னி
கொண்டான் கோலக் காவு கோயிலாக்
கண்டான் பாதங் கையாற் கூப்பவே
உண்டா னஞ்சை யுலக முய்யவே.

பிறைச்சென்னி, வேற்றுமைத் தொகை; 'பிறையை யுடைய சென்னி'யென்று இரண்டாவதன் உருபும் பயனும் விரித்துக்கொள்க. கொண்டான், கண்டான் வினையாலணையும் பெயர்கள். 'பாதங் கையாற் கூப்பவே'யென்றது, பாதத்தைக் கையாற் கூப்பி வணங்க வென்றற்கு. உண்டான், முற்று. 'கோலக்கா' வென்பது உகரச்சாரியை பெற்றுக் 'கோலக்காவு' என நின்றது. கையாற் கூப்பினுர், தேவர்.

பவள வண்ணப் பரிசார் திருமேனி
திகழும் வண்ண முறையுந் திருப்புன்கூர்
அழக ரேன்னு மடிக ளவர்போலும்
புகழ நின்ற புரிபுன் சடையாரே.

பவளத்தைப் போன்ற நிறத்தினியல்பு நிறைந்த தமது தீத் திருமேனி விளங்கும்படி வாழ்கின்ற திருப்புன்கூ ரழக ரென்னும் இறைவர், அன்பர்கள் புகழும்படி நின்ற புரியுடைய செஞ்சடைச் சிவபிரானவர் போலு மென்பது. 'உறையும் அழக' ரென்க. பரிசு, தன்மை; 'இன்ன பரிசென் றறிவரிதால்' (ஏயர்கோன், உஉஅ) என்னுந் திருத்தொண்டர் புராணத் திருவுரையைக் காண்க. புரி, திரி.

நீருர்திரு மேனிய ருனமி லார்பால்
ஊறுர்சுவை யாகிய உம்பர் பெருமான்
வேரு ரகிலும் மிகுசந் தனமுந்தி
ஆருர்வய லன்பி லாலந் துறையாரே.

ஊனமென்றது ஈண்டு மலத்தின் தீமையை; 'மேனியர் ஊனமிலா' ரென்பவர், அடியார்; அவர்பால் ஊறுதலுடைய சுவையாவது உம்பர் பெருமா னென்க. 'மெய்யுணருள்ளந்தோறுஞ் சென்றுளே யமுத மூற்றுந் திருவருள்' (கடவுள் வாழ்த்து, உ) என்பது திருவிளையாடல். உந்தி, அலையினுல் அசைந்து போகச் செய்து; ஆறு ஆர் வயல், ஆற்றுப் பாய்ச்சல் பொருந்திய கழனி. 'அன்பிலாலந்துறை,' ஒரு திருப்பதி.

கோட்டும் பறைசீராற் குழும வனலேந்தி
நட்டம் பயின்ருடு நல்லூர்ப் பெருமானை
முட்டின் றிருபோது முனியா தெழுந்தன்பு
பட்ட மனத்தார்க ளறியார் பாவமே.

'ஒலிக்கும் பறைகள் சிறப்பினால் ஒன்றுசேர நெருப்பைக் கையிலே ஏந்தி நட்டமாடும் நல்லூர்ப் பெருமா'னென்க. 'பயின்றாடு' மென்றார், தொன்று தொட்டுப் பழகியாடுதலின்; 'நள்ளிருளின் நட்டம் பயின்றாடும் நாதனே' (சிவபுராணம், அ௬) என்னுந் திருவாசகம் இங்கு நினைவுகூரற் பாலது. முட்டு, இடையூறு; இருபோது மென்றது, காலையும் மாலையும். பட்ட, உண்டான வென்றற்கு.

இளவழகனார்.

சமய அணிகலன்

[பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்]

தமிழகத்திலே பண்டு தொட்டு வழங்கிவரும் சமயங்கள் சைவம், வைணவம் என்னும் இரண்டுமாம். சங்கநூல்களிலெல்லாம் சைவத்திற்கே முதன்மை கூறப்படினும் மால் வழிபாடு யாண்டும் கடியப்பட்டிலது. சைவ நன்மக்களெல்லாரும் திருமாலிடத்தும் அன்புடையராயே ஒழுகி வந்தனர். அது சமயப்பற்றுக்கு மெலிவு தருவதாகக் கருதப்படவில்லை. சங்கநாளிலே தமிழ் மக்கள்பாற் சமயப்பற்று அழுத்தமாக இருந்ததென்பதற்குப் பல குறிப்புக்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றே இங்குக் காட்டப் புகுந்தது.

தமிழர்கள் தம் மக்கள் குழவிப் பருவத்து நோய் முதலியவற்றால் நலிவின்றி வாழ்தல் கருதி அவர்கட்குக் காப்பாக அணியும் அணிகலன்கள் இரண்டு. அவற்றுள் ஒன்று சிவபிரானடியை யுடையது; மற்றொன்று திருமாலடியையுடையது. பின்னது பிற்காலத்திற் பலராலும் கைக்கொள்ளப் பெற்று வந்தமையின் இலக்கியங்களிற் பெரிதும் பயில்வதாயிற்று. இது திருமாலின் வளை, திகிரி, தண்டு, வாள், வில் என்னும் ஐந்து படைகளின் உருவமைந்தது. இதனை ஐம்படை எனவும், தாலி எனவும், ஐம்படைத்தாலி எனவும் வழங்குவர். புறப்பாட்டிலே, பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனது இளமை மிகுதியைக் குறிக்குங்கால்,

"தாலி களைந்தன்று மிலனே; பால்விட்டு
அயினியும் இன்றயின் றனனே"

என இடைக்குன்றூர்கிழார் இதனை விதந்து கூறினர். மணிமேகலையிலே,

"செவ்வாய்க் குதலை மெய்பெறா மழலை
சிந்துபு சின்னீர் ஐம்படை நனைப்ப
அற்றங் காவாச் சுற்றுடைப் பூந்துகில்
தொடுத்த மணிக்கோவை யுடுப்பொடு துயல்வரத்
தளர்நடை தாங்காக் கிளர்பூட் புதல்வரை"

எனவும்,

"தளர்நடை யாயமொடு தங்கா தோடி
விளையாடு சிறுதே ரீர்த்துமெய் வருந்தி
அமளித் துஞ்சும் ஐம்படைத் தாலிக்
குதலைச் செவ்வாய்க் குறுநடைப் புதல்வர்க்கு"

எனவும் இளம்புதல்வரியல்பை விளக்குழிக் கூலவாணிகன் சாத்தனார் இவ்வணிகலனைச் சிறந்தெடுத்தோதினர். இவ்வாற்றால் இது சங்க நாளிலே பயின்றமை பெற்றாம்.

"தாலி யைம்படை தழுவு மார்பிடை
மாலை வாயமு தொழுகு மக்களைப்
பாலி னூட்டுவார் செங்கைப் பங்கயம்
வால்நி லாவுறக் குவிவ மானுமே"

எனக் கம்ப நாடர் கூறுவது பிற்காலத்திலும் இது பயின்று வந்தமையைக் காட்டும்.

"தம்பிரா னருளி னாலே தவத்தினன் மிக்கார் போற்றும்
நம்பியா ரூர ரென்றே நாமமுஞ் சாத்தி மிக்க
ஐம்படை சதங்கை சாத்தி யணிமணிச் சுட்டி சாத்திச்
செம்பொனு ணரையின் மின்னத் தெருவிற்றே ருருட்டு நாளில்"

என்னும் பெரிய புராணத் திருவிருத்தம் சைவ மக்களும் இதனை அணிந்து வந்தமைக்குச் சான்றாகும். பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்து மாமனாக வந்து வழக்குரைத்த படலத்தில்,

"ஐம்படை மார்பிற் காணேன் சிறுசிலம் படியிற் காணேன்
மொய்ம்பிடை மதாணி காணேன் முகத்தசை சுட்டி காணேன்
மின்படு குழைகள் காணேன் வெற்றுடல் கண்டே னப்பா
என்பெறு மென்று பிள்ளைப் பணிகளுங் கவர்ந்தா ரென்னு"

என்று கூறுவது முதலியனவுங் காண்க.

இனி, முன்னதாகிய சிவனுே டியைபுடைய அணிகலன் கலித் தொகையில் பல விடத்துக் கூறப்பெற்றுளது. மருதக்கலியில் ஓர் இள மைந்தனுடைய காலணி, இடையணி, கையணி, மார்பணி, தலையணி என்பன கூறுமிடத்தில்,

"பூண்டவை, எறியா வாளும் எற்ரு மழுவும்
செறியக் கட்டி யீரிடைத் தாழ்ந்த
பெய்புல மூதாய்ப் புகர்நிறத் துகிரின்
மையற விளங்கிய ஆனேற் றவிர்பூண்"

என மார்பணி கூறப்பெற்றுளது. இடையே ஆனேற்றின் உருவமும், அதன் இரண்டு புறத்தும் வாள், மழு என்பவற்றின் உருவமும் அமைக்கப்பெற்ற அணிகலன் இதிற் கூறப்பட்டுளது. வாள் என்றது முத்தலைவேல் (சூலம்) ஆகும். சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக்கொண்டு வழிபடும் சைவ மக்கட்கு இவற்றின் உருவுகள் சிறப்புடைய அடையாள மாதல்,

"பொன்னுர் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் போற்றிசெய்யும்
என்னுவி காப்பதற் கிச்சையுண் டேலிருங் கூற்றகல
மின்னுரு மூவிலைச் சூலமென் மேற்பொறி மேவுகொண்டல்
துன்னுர் கடந்தையுட் டுேங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே"

'கடவுந் திகிரி கடவா தொழியக் கயிலை யுற்ருன்
'படவுந் திருவிர லொன்றுவைத் தாய்பனி மால்வரைபோல்
இடபம் பொறித்தென்னை யேன்றுகொள் ளாயிருஞ் சோலைதிங்கள்
தடவுங் கடந்தையுட் டுேங்கானை மாடத்தெம் தத்துவனே"

எனத் திருநாவுக்கரசு சுவாமிகள் சிவபெருமானை வேண்டி அவற்றைப் பெற்றமையால் அறியப்படும். இப்பதிகத்து மூன்று திருப்பாட்டே இஞ்ஞான்றிருத்தலின் ஆளுடைய அரசுகள் வேண்டிய ஏனைய அடையாளங்களை அறிதற் கியலவில்லை. "திருவடி நீ றென்னைப்பூசு" மென மற்றெருரு திருப்பாட்டில் வேண்டுகின்றனர்.

சமரசம் உண்டாதற்குரிய உண்மைநெறி

[திரு N. துரைக்கண்ணனவர்கள்]

சமரசம் என்னுஞ் சொற்கு மக்கள் யாவரையும் ஒன்றுபடுத்துதல் என்பது முடிந்த பொருளாம். மக்கள் என்னுஞ் சொல் ஒரு சிறு பகுதியினரைக் குறிக்குமா, அன்றி ஒரு நாட்டினரைக் குறிக்குமா, அல்லது ஒரு கண்டத்திலுள்ளாரைக் குறிக்குமா? அல்லது இப் பரந்த உலகிலுள்ள மக்கள் யாவரையுமே குறிக்குமோவென ஆராய்ந்தால், அகன் ஞாலத்திலுள்ள மக்கள் யாவரையுமே குறிக்குமெனத் தெளியலாம்.

நாடு மொழி இனம் என்னும் பலதிறப்பட்ட உலகில் சமரசம் நிலவுதல் யாங்ஙனம்? ஒருசிறு பகுதியினராயுள்ள மக்களுள்ளேயே பிணக்கமும், கலாமும், பூசலும் விளைந்து ஒற்றுமைப்படாமலிருப்பதை நாம் கண்கூடாக இஞ்ஞான்றும் காண்கின்றனமே; அவ்விதமிருக்க, இந்நிலவுலகத்திலுள்ள மக்களை யொருவரோடொருவர் அளவளாவி மகிழும்படி ஒற்றுமைப்படுத்தல் என்பது ஊமை பகற்கனவு காண்பதுபோலவும், காலில்லாமுடவன் ஆகாயத்தாமரையைப் பறிக்கத் துறக்கத்துக்குச் சென்றதுபோலவும் அன்றோ முடியும். ஆதலின் சமரசம் என்னுஞ்சொல் வரிவடிவிலேயும், ஒலிவடிவிலேயும் நிலவலாமே யன்றிச் செயலளவில் காணமுடியாது. எனின்; நன்று வினவினாய்! நீசொல்லும் மாற்றம் இற்றைஞான்று ஒருவாறு பொருந்துமெனினும், பண்டைக்காலத்திலே சமரசம் என்பது சொல்லளவிலேயன்றிச் செயலினும் மிக்குத் திகழ்ந்தது. ஆ! யாங்கணும் சமரசம்! யாண்டும் ஒற்றுமை! எங்கணும் சகோதரப் பான்மை! ஒரே தாய்தந்தைக்குப் பிறந்த மக்களேபோல நம் முன்னோர் அன்புபூண்டு ஒழுகி வதிதருவாராயினர். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் முதலிய வெம்மைக் குணங்கட்கு இரையாகாது மக்கள் செம்மைக் குணங்களைக் கடைப்பிடித்து அளவளாவி மகிழ்ந்தனர் என்று சொல்வது மிகையாகாது.

பண்டைக்காலத்தில் அதாவது 60,000 ஆண்டுகளுக்கு முன் மக்கள்யாவரும் ஒன்றுகூடியே வாழ்ந்துவந்தனர். அவ்வாறு வாழ்ந்து வந்த மக்கள் தங்கள் வாழ்க்கையை முதலில் மலையில் தொடங்கி—குறிஞ்சிநிலத்தில் துவங்கிப்—பின்னர் முல்லைநிலத்தி லும், மருதநிலத்திலும், நெய்தல் நிலத்திலும் குடியேறி வாழ்வு நடாத்தலாயினர் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

இங்ஙனம், ஒன்றுகூடியிருந்து வாழ்ந்துவந்த மக்கள் பிரிந்து குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நிலங்களில் வாழ்ந்து வருதலும், அவ்வந்நிலத்திற் கேற்ற தெய்வங்களையும், வழக்க வொழுக்கங்களையும் கடைப்பிடித்து ஒழுகிவரலாயினர்.

இவ்வாறு மக்கள் அறிவுவிளக்கமுற உற, தங்கள் வாழ்க்கை யைச் செம்மைப்பட நடாத்துவான்வேண்டித் தங்களுள் கல்வியறி வொழுக்கங்களில் சிறந்தவர்களை அந்தணரென்றும், கல்வியறி வொழுக்கத்தோடு உடல்வன்மையும், மனத்திண்மையும் உடையவர் களை அரசினர் என்றும், உலக அனுபவமேயன்றி வாழ்க்கைக்கு வேண்டும் உணவுப் பொருள்களையெல்லாம் திறம்படச் சேகரிப் பவர்களை வாணிபரென்றும், உழவுவல்லாரை வேளாளரென்றும், ஏனைத் தொழில்செய்வோரைப் பல்வேறுவகைத் தொழிலாளரென் றும் பிரித்துக்கொண்டனர். ஆயின் அவர்கள் நிலவேறுபாட் டானும், தொழின்முறைபற்றிப் பிரிந்த பிரிவானும் உயர்வு தாழ்வு களைக் கற்பித்துக் கொள்ளாது சமரசத்தோடேயே வாழ்ந்துவந் தனர்.

இனி, ஒல்காப் பெரும்புகழ்த் **தொல்காப்பியதேவர்** காலத் திலும், தெய்வப்புலமை சான்ற **திருவள்ளுவநாயனர்** காலத்திலும் இம்முறையிலேயே சமரசம் மக்களிடை மிளிர்ந்து தலைசிறந்து விளங்கியது. அந்நாள் சமரசம் ஓங்கி வளர்ந்த பெருநாள்! சமரசம், அன்புஎன்னும் அரியணையின்மீ தமர்ந்து, அறம்என்னும் செங்கோ லைத்தாங்கி, நீதி என்னும் மணிமுடியைத்தரித்துச் செம்மாப்போடு உலகம்யாவையும் தனியரசாண்டது. ஆ! அஞ்ஞான்றைய வளங் கெழுமிய நாட்டின்சிறப்பையும், அதில் வாழ்ந்த மக்களின் அன்பு கலந்த—அளவளாவிய—ஒற்றுமையையும், அம்மக்கள் நடாத்திய

அன்புளங் கெழுமிய இன்பவாழ்க்கையையும் அக்காலத்திருந்த புலவர் பெருமக்கள் பாடிய பெருநூல்களுட் காணும்போது எம் மனத்தில் இன்பவூற்றுப் பெருக்கெடுத்து ஓடுவதை என்னென்பேம்! அவ்வித நன்னாளை-யாவரும் ஒன்றுகூடி யளவளாவும் பெருநாளை-என்றுகாண்பேம், என்றுகாண்பேம் என்று எம் உள்ளம் விழை கின்றது.

இங்ஙனம் தொல்காப்பிய தேவர்காலத்திலும், திருவள்ளுவ தேவர் காலத்திலும் உலகமுழுவதையும் ஒருகோலோச்சி அரி யணைமீமிசை அரசுவைகிய சமரசமானது வீழ்ந்துபடுதற்குக் காரணமென்னையென்று துருவியாராயின், மக்களுள்ளத்தில் தம் முள் ஒருவரையொருவர் அடக்கியாளுதல் வேண்டும் என்னும் தீயஎண்ணங் குடிகொண்டதனாலேயே என்பது நன்கு விளங்கும். அவ்வெண்ணம் மேலெழஎழ உலகியல் செவ்வனே நடைபெறற் பொருட்டுப் பார்ப்பனர், அரசினர், வாணிபர், உழவர் என நான்கு பிரிவினராய்த் தொழின் முறைபற்றிப் பிரிந்த மக்கள் தம்முள் ஏற்றத்தாழ்வுகளை வகுத்துத் தொழிற்பிரிவுகளைப் பிறப்புப் பிரி வுகளாக மாற்றிக் கொள்ளலாயினர்.

இவ்வாறு இயற்கையறிவோடு திகழ்ந்து சமரசத்தில் வைகிய மக்கள் செயற்கைக்குணங்களைக் கடைப்பிடித்து ஒற்றுமையென் னுங் கட்டையறுத்துத் தொழின்முறைபற்றிய பிரிவைப் பிறப்புப் பிரிவாகக்கொண்டு சிறுசிறு இனங்களாய் வேறுபடுதலும், இவ்வித வேறுபாட்டால் யாண்டும் கலாமும், பிணக்கமும், போரும், பூசலும் மிகுதிப்படலாயின.

இனி, இவ்விதம் மக்களிடையே கலாமும் பூசலும் நிகழ்ந்த காலத்துத்தான் திருஞானசம்பந்தப்பெருமான் முதலிய பெரியார் கள் தோன்றி அமைதியை யுண்டாக்கிச் சமரசத்தை நிலவச்செய் தற்கு வேண்டுவனவாய செம்மைநெறியைக் கோலி, மக்களை அந் நெறியில் செலுத்தி—அந்நெறியைக் கடைப்பிடித் தொழுகுமாறு கற்பித்துப் போந்தனர். அவ்வான்றோர்கள் செப்பமுடைய செல் வர்களாதலின், அவ்வக்காலத்திருந்த மக்களின் உள்ள நிலையை

யளித்து அதற்கேற்றவாறு உண்மைநெறியை—சன்மார்க்கத்தை, நிலைநிறுத்திச் சமரசத்தைப் பரவச்செய்தனர்.

இவ்வாறு செந்நெறிச் செல்வர்களாய **திருஞான சம்பந்தர், இடபதேவர், மஹாவீரர், புத்தர், இயேசுநாதர், மகம்மதுநபி** முதலிய பெரியார்கள் சமரசத்தை மக்களிடை பரவச்செய்வதற்குத் துணைபுரிவதாய உண்மைநெறியை அவரவர்கள் காலத்திற்கும் நாட்டிற்கும் ஏற்றமுறையின் காட்டிச்செல்லுதலும், அப்பெரியார்களைப் பின்பற்றியவர்கள் (Followers) சமரசமுறையைக் கைவிட்டுத் தம்முள் சமயப்பகைமை பாராட்டுவாராயினர். எனவே, சமரசத்திற்கென எழுந்த இயக்கங்கள் இஞ்ஞான்று அதனைக் குலைத்தற்கு ஏதுக்களாய்—கருவிகளாய்—அவ்வியக்கத்தைப் பின்பற்றிய மக்களால் கொள்ளப்பட்டு வருகின்றனவெனின் சமரசம் எங்ஙனம் தலைகாட்டும்?

இஞ்ஞான்று நம்நாட்டின்—இந்தியாவின்—நிலைமை நோக்குங்கள். ஒருநாடு மற்றொருநாட்டை இழிக்கின்றது. ஒரு கண்டத்திலுள்ள மக்கள் மற்றொரு கண்டத்திலுள்ள மக்களை இழிவாக நினைத்துப் பழிக்கின்றனர். தேசியச்சண்டை எத்துணை! ராஜீயச் சண்டை எத்துணை! சமயப்பிணக்கு எவ்வளவு! சாதிப்போர் எவ்வளவு! இவ்வித நெருக்கடியான நிலையில் சமரசம் சமரசம் என்று வெறும் பேச்சளவில் முழக்கம் செய்தல் என்ன பயனை விளைக்கும். எழுதுகோல்கொண்டு வரைவதால் என்னபயனுண்டாம். சமரசத்தையும், சகோதரத்துவத்தையும் மக்களிடையுண்டாக்கி அவர்கள் தன் மதிப்பைப் பெறச்செய்வோம் என்று அறைகூவும் சீர்திருத்தக்காரர்கள் (Reformers) என்போர் பல இடங்களிலும் சமரசம்உண்டாதற்குரிய நெறிகளைக் காண முயலுதல் வேண்டும். சமரசம் என்னும் பரந்தநோக்கம் எழுதற்குரிய எண்ணங்களை மக்களுள்ளத்தில் எழுப்புதல் வேண்டும். இவ்விதவழிகளைக் கல்வியறிவின் முதிர்ச்சியும் உலக அனுபவமும் வாய்ந்த அறிவோர்களின் துணைகொண்டு செவ்விதாக ஆராய்தல்வேண்டும். நமக்கு முன்னர்ச் சமரசத்தை யுண்டாக்கிய விழுமியோர்கள் அதனைப் பரவச்செய்தற்கு என்னமுறை கோலினர்கள் என்பதை நுண்ணிய அறிவு

கொண்டு நோக்கவேண்டும். இவ்விதச் செவ்விய முறைகளை விடுத்துச் சமரசம் சமரசம் என்று நாக்கடிப்பாக வாய்ப்பறையடிப்பதும், சமரசத்தை மக்களிடை யெழுப்புவோமென்று அறநெறியாகிய செவ்விய முறையை விடுத்து மறத்துறைகளில் இறங்கிக் கலாம் விளைப்பதும் சமரசத்தை யுண்டாக்குவனவாகா.

இனி, சமரசம் என்னும் பரந்தநோக்கத்தை மக்களுள்ளத்திடை எழுப்பும் வழி எதுவெனச் சிறிது ஆராய்வாம். மக்கள் சமரசநிலை யெய்துவதற்குக் கடவுள் நம்பிக்கை இன்றியமையாது வேண்டப்படும். ஆறறிவுடைய மக்களாகிய நமக்கு அறிவு விளங்குவதற்கு ஏதுவாகிய யாக்கையும், அவ் யாக்கைக்கு இன்றியமையாதனவாய உறுப்புக்களையும், நாம் இருந்து வாழ்தற்கு இப்பரந்த உலகத்தையும், நாம் துய்ப்பதற்கு வேண்டும் பொருள்களையும் கருணையினால் அளித்த **கடவுள்** என்னும் **செம்பொருள்** ஒன்று உண்டு என்பதை யொவ்வொருவரும் உண்மையான் உணர்ந்து நிச்சயித்தல்வேண்டும்: அவ்விறைவனே நம்மையெல்லாம் படைத்த தலைவன் என்றும் அறிதல்வேண்டும்.

இவ்விதம் புல் முதல் மக்கள் ஈறுகவுள்ள—அதாவது ஓரறிவுயிர்முதல் ஆறறிவுயிர் ஈறுகவுள்ள—எல்லாவற்றையும் படைத்த எல்லாம்வல்ல முழுமுதற் பொருளாகிய பேரறிவுப் பிழம்பைச் **சிவன்** என்று செப்புமின்கள்! திருமால் என்று தெரிந்தோதுமின்கள்? பிரமன் என்று பெயரிடுமின்கள்! அன்றி, அருகன் என்று அரற்றுமின்கள்! புத்தன் என்று போற்றுமின்கள்! இயேசு என்று ஏத்துமின்கள்! அல்லாஹ் என்று அழைமின்கள்! எப்பெயரிட்டாயினும் வழிபடுமின்கள்! பெயரளவில் உங்கட்குப் பிணக்கும் போரும் நிகழவேண்டா! ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லா அவ்விறைவனை ஆயிரந் திருநாமங்களால் அவரவரின் இச்சைப்படியழைப்பினும்—வழிபடினும்—மக்களாகிய நாம் அனைவரும் கடவுள் ஒருவனே என்னும் உண்மையை மறந்து மயக்குற்று, சமயவாதிகள் தத்தம் மதங்களே அமைவதாக அரற்றி மலையும்சூழலில் தலைப்படலாகாது என அறிக.

உலகிலுள்ள நாமெல்லாம் வினையினீங்கி விளங்கிய அறிவின் முனைவனும், முனிவிலாததோர் பொருளானவனும் ஆய கடவுளாலேயே படைக்கப்பட்டவர்கள். அவ் வெம்பெருமான் நமக்கெல்லாம் உண்மைத்தாயும் தந்தையுமாவான். நாம் அவன் திருப்புதல்வர்களாவோம். ஒரே தாய்தந்தைக்குப் பிறந்த குமாரர்களுள் பிணக்கும்போரும் நிகழ்தல் உண்டாஎன்பதை யுய்த்துணருங்கள்? நண்பர்களே! அவர்கள் அன்பு கொண்டன்றோ ஒருவரையொருவர் நேசிப்பார்கள். தம் சகோதரர்களுள் ஒருவனுக்குத் துன்பம் நேர்ந்தால் மற்றவர்கள் அதனைக் கண்டு சகிப்பார்களா! அவனுக்குண்டாகிய இடும்பையைத் தங்களுக்கும் உற்றதுபோலன்றோ நினைந்து வருந்துவார்கள். அதுபோல் நிலைபெற்ற தாய் தந்தையாகிய கடவுளின் குமாரர்களாகிய நாம் நமக்குள் கலாமும் போரும் பூசலும் உண்டாக்கிக்கொள்ளலாமா? அச்செயல் அறிவுடைமையாகுமா? சிந்தித்துத் தெளிமின்கள் அறிஞர்களே! மக்களாகிய நாமெல்லாம் கடவுளின் ஒரே புதல்வர்கள் என்னும் உண்மையை உணரும் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் சமரசஉணர்ச்சியுண்டாகாமலிருக்குமா? கூர்ந்து நினைமின்கள் அன்பர்களே! கடவுளுணர்ச்சியில்லா மக்களிடை சமரசம் நிலவாதென்பது ஒருதலை. கடவுளுணர்ச்சி மக்களுக்கு இன்றியமையாததொன்றில்லை என்று அறைகூவும் சீர்திருத்தக்காரர் என்போரால் ஒருகாலும் சமரசத்தை மக்களிடைபரப்ப இயலாது என்பது திண்ணம். சமரசத்தை யுண்டாக்க முன்வரும் அறிஞர்கள் இவ்வுண்மையையறிந்தன்றோ மக்களுக்கு உணர்த்தவேண்டும். இதனைவிட சமரசத்தை யுண்டாக்கும் நெறி வேறொன்றிருப்பதாக நமக்குத் தெரியவில்லை. இவ்வழியை மக்கள் பின்பற்றும் நாள் சேய்மையிலில்லை. இன்னொன்றும் சில அறிஞர்கள் முன்வந்து இவ்வாய்மையை மக்களிடை கிளத்துகின்றார்கள். அவர்கள் சமரச சமயத்தைக் (Universal Religion) கோலும் முறையைக் கண்டு பிடித்துச் செப்பனிட்டு வருகிறார்கள். இம்முயற்சியில் நம் நாட்டாரைவிட மேனாட்டாராகிய ஆங்கில நன்மக்களே ஊக்கத்தோடு உழைத்து வருகிறார்கள். அவர்கள் நன்முயற்சி வென்றி பெறுவதாக.

அது கிடக்க, மேல் நாம் கூறிய கூற்றைச் சிறிது விரித்துக் கூறுகின்றுழி, நாமெல்லாம் ஒரே தாய் தந்தையாய இறைவனின் புதல்வர்கள் என்னும் உண்மை புணர்வு சைவரப்பெறுங்கால், நம்முள் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்னும் எண்ணம் உண்டாதல் எவ்விதம்! அவர் யாவரினும் மிக்குயர்ந்தார்! அவரினும் சிறிது தாழ்ந்தார் இவர்! உவர் நம்மால் தீண்டப்பெறுதார்! என்னும் இன்ன பல பிணக்குகளுக்கு இடம் யாங்ஙனம்! சைவர் இவர்! அவர் வைணவர்! புத்தசமயத்தினர் உவர்! சமணசமயி இவர்!இவர் இஸ்லாமியர்! அவர் கிறிஸ்தவர்! என்று வேற்றுமையுணர்ச்சிபற்றிக் கூறும் பகைமைகளுக்கு இடம் யாங்ஙனம்! அவரவர் இயற்றுங் கருமங்களுக்கு ஏற்ற தகுதியும், அவரவர்கொண்ட கொள்கைகளுக்குத் தகுந்த குறிகளும் கொண்டவர்களாய் மக்களிருக்க, அவரவர்களின் தாளாண்மையாலும், அவரவர்களின் கொள்கையாலும் உயர்வுதாழ்வு கற்பித்தல் யாங்ஙனம்! சமயக்கணக்கர் மதிவழிகூறுது உலகியல்கூறிப் பொருளிதுவென்ற தெய்வப்புலமைத் திருவள்ளுவரின்,

"பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்."

என்னும் தேமொழியைத் தேர்மின்கள். அறிஞர்களே ! ஆ என்ன அருமைத் திருவாக்கு ! இவ்வித உண்மை வேதத்தையும், செம்பொருள் பலவற்றைத் தெரிக்கும் அறிவியல் நூல்களையும் அளித்த தென்னுடு! திருநாடு! செந்தமிழ்நாடு!இஞ்ஞான்று என்ன நிலைமையி லிருக்கின்றது! ஆ! நினையுங்கால் உள்ளுருகுகின்றது! இவற்றிற்கெல்லாம் காரணமென்னை! உண்மை யுணராததொன்றே யென்பதில் ஐயமென்னை?

அது கிடக்க, மக்களாகிய நாமெல்லாம் கடவுளின் புதல்வர்கள் ஆதலின் நம்முள் சாதிப்போரும், சமயப்பிணக்கும், மற்றைய கலாமும் நிகழ்தல் அடாது என்பதை வலியுறுத்திச் சமரச எண்ணத்தை யெழுப்புதலோடு, மேல் யாம் சொற்றவண்ணம் சமரசம் செயலில் வருவதற்குரிய முறைகளைச் செம்மைப்படக் கோலுதல் வேண்டும். சமரசம், (Importiality) சகோதரத்துவம், (Bro

therhood) என்பவற்றை மக்களிடை யுண்டாக்கித் தன்மதிப்பைப் (Self-Respect) பெறச்செய்ய முன்வந்துள்ள சீர்திருத்தக்காரர் ஒவ்வொருவரும் சமரசஎண்ணத்தை மக்களுள்ளத்தில் நிலைப்படச் செய்து பின்னர், தாழ்த்தப்பட்டவர்களாய்—தீய எண்ணத்தை மேற்கொண்டு தீயவினைகளையே பேதைமையால் தம் வாழ்நாளில் பெரும்பாலும் செய்பவர்களாய்—உள்ள மக்களை அவர்கள் முன்னேற்றம் அடைதற்குரிய வழிகளைச் செய்து சீர்திருத்தித் தீய எண்ணங்களையும் தீயவினைகளையும் மேற்கொள்வதினின்றும் விடுபடச் செய்தல்வேண்டும்.

இவ்விதம் அவர்களை நல்லெண்ணங்களிலும், நன்முயற்சிகளிலும் ஈடுபடச்செய்தலே சமரசத்தை மக்களிடை எழுப்புதற்குரிய எளியமுறையாம். இனைய பல செவ்விய முறைகளை யெல்லாம் விடுத்து மறத்துறைகளைக் கடைப்பிடித்துச் சமரசத்தை மக்களிடை எழுப்புவோம் என்று முழக்கஞ்செய்யும் வெற்றுரையாளரெல்லாஞ் சமரசத்தை யுண்டுபண்ணுபவர் ஆகார் ஆகார் ஆகார் என்பதை வலியுறுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாமென்பது. சிவம்.

கொடுக்கூர் கோவிந்தன்

[திரு. காழி. சிவ கண்ணுசாமி யவர்கள் B. A.]

(௨௯௨-ம் பக்கத் தொடர்ச்சி)

நந்தவனத் தருகே வந்ததும் குதிரைகளை ஒரு சாப்பாட்டு விடுதியிலுள்ள கொட்டிலில் விட்டு விட்டுப் பெருவிழா நடக்கும் நந்தவனத்துட் புகுந்தனர்.

அங்கு நடக்கும் கொண்டாட்டம் இவர்கள் பார்த்திராத காட்சியன்று, கண்டுகளித்துச் செல்லவேண்டுமென்று இவர்கள் வந்தவர்களல்லர். அன்றி அங்கு இயல்பாக நடைபெறும் சிறு திருட்டுகளிற் கலந்து கொள்ள வந்தவர்களுமல்லர், அச்செய்கைகட்கும், இவர்கட்கும் அதிலும் பரட்டைமுனியன் நீங்க

லான மற்ற நால்வர்க்கும் வெகு தொலைவென்பது யாவரும் அறிந்ததே. திவான்பகதூர் முதலியாரைக் காண்பதாகச் சம்பு லிங்கம் அளித்திருந்த வாக்கை நிறைவேற்றவே இவர்கள் வந்திருந்தனர். இன்றேல் பரட்டையும் முனியனும் தவிர்ந்த ஏனையோர் அங்குச் செல்லவேண்டும் எனக் கனவிலுங் கருதியிரார்.

வரிசை வரிசையாகக் கடைகளும் வேடிக்கைக் கொட்டகைகளும் இருமருங்கிலும் அமைந்திருந்தன. முதலியாரது உருட்சியான நரைத்த தலை எங்கேயாவது கூட்டத்திற் புலப்படுகிறதா என்று கூர்ந்துநோக்கிய வண்ணம் மூவரும் கும்பலிற் புகுந்து புகுந்து சென்றுகொண்டிருந்தனர். அன்றியும் காசி, பரட்டை, முனியனாகிய மற்ற மூவர் மேலும் ஒருகண் இருக்க வேண்டியது இன்றியமையாததாயிற்று. காசி மிகவுந் தந்திரமாக நடந்துகொள்வான் என்ற நம்பிக்கையிருந்தாலும் மற்ற இருவரைப்பற்றி அவ்வாறு நம்புவதற்கில்லை.

வரவரக் கூட்டம் மிகுந்துகொண்டேயிருந்தது. முன்னும் பின்னும் மக்கள் திரள் திரளாகப்போய் வந்துகொண்டிருந்தனர். சட்டென்று பட்டக்காரனது விலாப்புறத்தில் சம்புலிங்கம் குறிப்பாக இடித்தான். பட்டக்காரனும் அஃதின்னதென உணர்ந்து தம்மண்ணனுக்கு ஒரு இடிகொடுத்தான்—எதிரே சற்றுதூரத்தில் செம்பட்டை மயிர் மீசையுடன் முனியனும் அவனுக்குச் சற்று பின்னாகப் பரட்டையும் சென்றுகொண்டிருந்தனர்.

ஆனால் அவ்வாறு ஒருவர்க்கொருவர் அண்மையில் போய்க் கொண்டிருப்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்களோ இல்லையோ என்பதைச் சம்புலிங்கம் உணரமுடியவில்லை. அவர்களிருவரும் தத்தம் வேலையின்மீது கருத்தைச் செலுத்திச் சென்றதாகவே தோற்றிற்று. சம்புலிங்கமும் தன் தோழர்களுடன் அவர்களைப் பின்தொடர்ந்து செல்லலானான்.

சிற்றுண்டிக் கடைகள் இருக்கும் பகுதி வந்தது. பலதிறப்பட்ட தின்பண்டங்களும், பச்சைப்பயறுநீர், சுக்குநீர் முதலிய

குடிநீரும் விற்கும் கடைகள் இருசாரும் நிறைந்திருந்தன. ஆனால் அவற்றுள் ஒரு கடைமுன் மட்டும் கூட்டம் மிகுதியாக விருந்தது. அதுதான் காரதோசைக் காமாட்சியம்மாள் கடை. சுடச்சுடக் காரதோசை போட்டுக் கொடுப்பதில் காமாட்சியம்மாள் பெயர்பெற்றிருந்தவளாதலால், அக்கடைமுன்னும் கடையினுள்ளும் எப்பொழுதும் கூட்டத்திற்குக் குறைவில்லை. அன்றியும் இடம் சிறியதாகையாலும் தோசைகள் சுடச்சுட இருக்கவேண்டுமென்று எல்லோருங் கேட்பதால் அவ்வப்பொழுது ஒன்றிரண்டாகச் சுட்டுக்கொடுக்க வேண்டியதாக இருந்தமையாலும் முறையாக முன்வந்தவர்கள் உட்கார்ந்துண்ண மற்றையோர் காரதோசைக்காகக் காத்து நிற்கவேண்டியதாக இருந்தது. இதுவே கடைமுன் நின்ற கூட்டத்திற்கு ஏதுவாகும்.

இக் கூட்டத்திடை எவ்வாறோ முனியனும் பரட்டையும் நுழைந்து கடையினுள் இடம்பெற்று ஆளுக்கொரு காரதோசை வாங்கி அவாவுடன் உண்ணத்தொடங்கினர். இரண்டு குவளைகளில் பச்சைப்பயறு நீரும் அவர்களின் பக்கலில் வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் ஒரு வடநாட்டுக் குறவன் முனியனின் பின்புறம் வந்துநின்றான். கடைவாயிற்படியிற் கூட்டத்துட் கலந்து நின்றுகொண்டிருந்த சம்புலிங்கமும் அவனது தோழர்களும் அக்குறவன் காசியென்று கண்டுகொண்டனர். அவ்வாறே அவன்புறம் திரும்பிய பரட்டையும் திரும்பியவுடன் கண்டுகொண்டான். முனியன்மட்டும் தான் உண்ணும் தோசையின் மீதே தன்னுடைய கருத்து முழுவதையும் ஒருமிக்கச்செய்து அஃது எப்படியாவது தன்வயிற்றினுள் தட்டாமற்சென்று இடம்பெறவேண்டுமே எனத் தவங்கிடப்பான்போல் குனிந்த தலை நிமிராமல் வேலைசெய்துகொண்டிருந்தான்.

அவனது இடது தோளைத் தன்கையால் தொட்டுவிட்டுச் சட்டெனக் கையை எடுத்துக்கொண்டான். காசி சரிதான்,

போலீஸ்புலி கோவிந்தசாமி நாயுடுவின் படைகளில் யாரோ ஒருவன் தன்னைப் பிடித்துவிட்டான் போலும் என்று நடுநடுங்கியவனாய்ப், பாதியுயிர் வெளியேக முனியன் இடதுபுறந் திரும்பிப் பார்த்தான். அவன் திரும்பிய அதே நேரத்தில் வலதுபுறமாகத் தன் கையைநீட்டி அவன் முன்வைக்கப்பட்டிருந்த தோசையின் மிகுதியனைத்தையும் அப்படியே அள்ளிக்கொண்டான் காசி. பரட்டையின் பெரிய கை பின்புறமாகச்சென்று காசியின் கையிலிருந்த தோசையைவாங்கிப் பரட்டையின் தட்டில்வைத்து விட்டது. இவ்வளவும் ஒரு கண்ணிமைப்பொழுதில் நடந்ததென்றே சொல்லலாம்.

இடதுபுறந் திரும்பிய முனியன் தன்பின்னால் காசி நிற்கக் கண்டதும் சென்ற பாதியுயிரும் மீண்டவனைப் இரட்டித்த ஆவலுடன் காரதோசையைக் காலிசெய்யத் திரும்பினான்.

திரும்பினவன் திகைப்புண்டு மிதித்தவனைப்போல் சற்று நேரம் அசைவற்று உட்கார்ந்திருந்தான். கண்கள் அகன்று சுழன்றன; திறந்தவாய் திறந்தபடியே இருந்தது. ஏன்?—தட்டிருக்கின்றதே தவிர தோசையைக் காணவில்லை. அவன் முன்னமே பயந்து தவங்கிடந்ததற்கேற்பக் காரதோசையாகிய உயிர் அவன் வயிறுகிய முத்தியுலகை முழுதும் அடையவில்லை என்று கண்டுகொண்டான்.

"எந்த நாடோடிக் களவாணிப்பயல் என்தோசையைத் தொட்டவன்?" முக்காற்பங்குக்கு மேலிருந்த தோசையையுங் காணும்; அதிலிருந்த சுண்டாங்கியையுங் காணுமே" என்று அதட்டிக் கூவி அங்குமிங்கு முள்ளவர்களை வெறிக்கப்பார்த்தான். தன் வலப்புறத்தில் அடுத்துட்கார்ந்திருந்த ஒருவனது தட்டில் பாதிதோசை யிருக்கக்கண்டான். அதுதான் தன் தோசையோ என்னவோ என ஐயங்கொண்டான்.

"ஏண்டா பொறுக்கிப்பயலே, நான் திண்ண எச்சிண்ணு கூடப் பார்க்காமல் எந் தோசையைத் திருடிக்கிட்டையா?" என்றுகேட்டான். அதுகேட்ட மற்றவன் "உன் எச்சிலே எந்த

நாய்தொடும்? கையிலே காசுகொடுத்து வாங்கின தோசெடா இது; நீ ஓம்பாட்டுக்கு வாயிலே வந்தபடிப் பேசுறியே என்ன? நாக்கே உள்ளே வச்சுப்பேசப்பன். மீசையைப் பாருங்கடா மீசையை! ஏண்டா கொசவன் ஊட்டு சாயப்பானையிலே வாயை உட்டியா; இல்லாட்டி பொங்கலுக்கு அடிச்சுமீந்த காவி வீணுப் பூடாமே மீசேலே தடவிக்கிட்டியா ?" என்று பதிலிறுத்தான்.

அதற்குள் கூட்டத்திலிருந்த யாரோ ஒருவன் "பழி ஒரெடத்துலே பாவம் ஓரெடத்துலேங்கறது சரியாருக்குப் பாரு. அந்த செப்டு வித்தைகாரன் தோசையைத் திருடிக்கிட்டா பக்கத்திலெருக்கவங்கிட்டெ சண்டைக்கிப் போராம்பாரு இவன்" என்று கூறினன். முனியன் பரட்டையைப் பார்த்தான். அவனுக்கிருந்த துடிதுடிப்பில் பரட்டையை இன்னனென்று கண்டு கொள்ளமுடியவில்லை. அவன் முன்னிருந்த தட்டைப் பார்த்தான். ஒருதோசைக்குமேல் வரக்கூடிய துண்டுகள் அதிலிருந்தன. அவ்வளவுதான், அவன்கண்கள் அவன் மீசையையொப்பச் சிவந்தன. பரட்டைக்குந் தனக்கும் நடுவில் மற்றொரு ஆள் உட்கார்ந்திருக்கின்றுன் என்பதைக்கூடக் கருதாமல் "ஏண்டா திருட்டுக்கழுதை; அப்படியா சங்கதி, அந்த எச்சத்தோசையோடே இதையும் வாங்கிக்கோ" என்று கையைநீட்டி ஒரு குத்துவிட்டான்.

பரட்டை சற்று ஒருபுறம் விலகிக் கொண்டவனுய் "அவ்வளவுக்கு ஆத்திரப் பட்டுக்க வாணும். பாதி காசுதான் குடுத்தே; போலேர்க்கு. பாதி தோசை கெடச்சிது. அதுக்கு யாரென்ன பண்ணுலாம்" என்று பெரிய துறவியைப்போல் முகத்தை நீட்டியவண்ணம் மெதுவாக மொழிந்தான்.

முனியனுக்குக் கட்டுக்கு மீறிச் சினம் பொங்கிற்று.

"போக்கிரிப் பயலே, எச்ச தோசெயே திருடிக்கிட்டதுமில்லாமே ஞானம் வேறையா பேசுறே; ஓன்னைத் தோசையா பண்ணிப்டுகிறேன் பாரு." என்று கூறிக்கொண்டே பரட்டையின்மீது பாயக் கிளம்பினன்.

அதே விநாடியில் அவன் தோளின் மீது ஒரு கைவைக்கப் பட்டது. வைத்த கை இரும்பைப்போ லிருந்ததால் தன்னை அறியாமல் முனியன் ஒடுங்கி யாரெனத் திரும்பிப் பார்த்தான்:—கோட்டூர் இளைய மிட்டாதார் நாராயணசாமி ரெட்டியார்!!!

சம்புலிங்கமாகிய அவரையன்றி வேறு யாரும் தன்னை அவ்வாறு தடுத்திருக்க முடியாதெனக் கண்டு கொண்டதும் மறுவார்த்தை புகலாமல் வெளியேறினான் முனியன். காசியும், பரட்டையும் இருந்த விடந் தெரியவில்லை.

"அடே நீயாரப்பா குறுக்கே வந்து மொளச்சே. நீ தடுக்காட்டி கொஞ்சம் வேடிக்கை பாத்திருக்கலாமே" என்று ஒரு சிலர் கூறினர். சம்புலிங்கம் ஒன்றும் பேசவில்லை. பரட்டையையும் முனியனையும் சண்டையிட விட்டு விட்டால், விளையாட்டு வினையாக முடிந்து விடும். வீண் கலவரத்தால் வந்த வேலை கெட்டு விடும் என்பதை அவன் உணர்வான். ஆகையாற்றான் அவன் குறுகிட்டுத் தடுத்தது.

தோழர்களிருவருடனும் சம்புலிங்கம் வெளி வந்து வடக்கு நோக்கிச் சென்றான். சூதுக் கடைகளும், செப்பிடு வித்தை, மற்போர், விந்தைப் பிறவிகள் முதலிய காண்பிக்கப் படும் கடைகளும் இருக்குமிடம் வந்து சேர்ந்தான்.

சம்புலிங்கம் ஏதோ ஒரு குறிப்பிட்ட கொட்டகையைத் தேடுபவன்போல் ஒன்றொன்றாகப் பார்த்து வந்தான். முகத்தில் ஓர் ஏமாற்றக் குறிப்புத் தோன்றிற்று. சென்ற ஆண்டு வந்திருந்த தாடிக்காரி ஒரு வேளை இறந்துவிட்டாளோ என்னவோ அதனால் தான் வரவில்லைபோலும் என்று நினைத்தான்.

அச் சமயம் ஒரு வடநாட்டுக் குறவன் எப்படியோ வழி விலக்கிக் கொண்டு அவன் பின்புறம் வந்து "நேராகச் சென்று வலது புறம் திரும்புங்கள். வடவண்டைக் கீழ் கோடி" என்று கூறி விட்டு மறைந்தான்.

அவ்வாறே குறித்த இடம் நோக்கி வந்தான் சம்புலிங்கம். இரண்டு கொட்டகைகள் ஒன்றை யொன்று அடுத்து அமைக்கப்

பட்டிருந்தன. இரண்டிற்கும் இடையே ஒரு சிறிதுதான் இடை வெளியிருந்தது. முதற் கொட்டகையின் முன்புறம் இரண்டு மூங்கிற் கோல்களி னுச்சியிற் கட்டப்பட்டிருந்த ஒரு வெள்ளைத் துணியில்,

"நில்லுங்கள்! நில்லுங்கள்! உள்ளே செல்லுங்கள்! செல்லுங் கள்! தமிழ் நாடெங்கும் புகழ் படைத்த சித்தாதி சித்தர் பீதாம்பர யோகியைக் குறிகேளுங்கள்! உள்ளங்கை நெல்லிக்கனிபோல் வாழ்நாளின் போக்கனைத்தையும் ஒரே நொடியில் அறிந்து கோள் ளுங்கள். இச்சமயம் தவறினல் மறு சமயம் வாய்ப்பது அரிது, அரிது." என்று கொட்டை கொட்டையாக எழுதப்பட்டிருந்தது.

"இதுவும் நல்லதுதான். என்றைக் கிருந்தாலும் தூக்கு மரத்தில்தான் தொங்கப் போகிறோமா, அன்றி வழியாக இறக்கப் போகிறோமா என்பது தெரிந்தால் சிறிது அமைதியாக இறக்க லாம். என்ன சொல்லுகிறீர்கள்" என்றான் பட்டக்காரன்.

"அவன் குறி சொல்ல வேண்டாம்; நானே சொல்லுவேன் அதை" என்றான் சம்புலிங்கம்.

"நான் வரவில்லை அங்கே" என்றான் தம்மண்ணன்.

பட்டக்காரனுக்கும் குறி கேட்க வேண்டுமென்ற அவா வில்லை. உள்ளே யிருக்கும் மந்திரவாதி யார் என்பதை அறியவே நினைத்தான். வெளிப்புறத்திலிருந்தபடியே எட்டிப் பார்த்தான். ஒன்றுந் தெரியவில்லை. வாயிற்படியில் தொங்க விட்டிருந்த திரை யைத் தூக்கி உள்ளே ஆட்களை விடுவது யாரென்றுகூடத் தெரிந்து கொள்ள முடியவில்லை. சிறிது ஏமாற்ற முற்றவனாய்ச் சம்புலிங் கத்தைப் பின் தொடர்ந்தான்.

அடுத்த கொட்டகைதான் தாடிக்காரியின் கொட்டகை. அதனுள்ளே செல்வதற்கு அரையணாவாகிய குறைந்த கட்டணமே விதிக்கப்பட்டிருந்தாலும் யாரும் செல்ல வில்லை. இரண்டு தலை மாடு, எட்டுக்கால் ஆடு, வாலில்லாக் குரங்கு என்பது போன்ற விந் தைப் பிறவிகள் வைக்கப்பட்டிருக்கும் பக்கத்துக் கொட்டகை

களிற் கூட்டஞ் சென்றுகொண்டிருந்ததே தவிர தாடி முளைத்த பெண் பிள்ளையை ஒருவரும் பார்க்க நினைக்கவில்லை போலும்.

மூவரும் கொட்டகையின் முன் நின்றனர். தான் அவ்வாறு நிற்பதை யாருங் கூர்ந்து நோக்குவார்களெனச் சம்புலிங்கம் கருத வில்லை. ஏனெனில் அவன் கொண்டாட்ட ஆரம்பத்திலேயே வந்துவிட்டபடியால் முதலியாரின் ஆட்களாவது, போலீஸ் புலி கோவிந்தசாமி நாயுடுவின் படைகளாவது அவ்வளவு விரைவில் தன்மேற் கண்வைத்திருப்பார்களென நினைக்கவில்லை.

திவான்பகதூர் முதலியார் அக்கொட்டகைக்குள் எப்படியும் வருவார் என்பதைச் சம்புலிங்கம் அறிவான். ஏனெனில் ஒரு பொருளைத் தொடாதே, அல்லது பாராதே என்று சொன்னால் அதைத் தொடவோ அல்லது பார்க்கவோ முயலுவதுதான் மக்களியற்கை என்பதை நன்றாய் உணர்ந்திருந்தான். அன்றியும் தாடிக்காரியிடம்மட்டும் போகாதே என்று எச்சரிக்கை செய்தால் ஒரு வேளை அங்குத்தான் சம்புலிங்கம் ஒளிந்துகொள்ள நினைத்திருக்கின்றான் போலும் என இயற்கையாக முடிவு கட்டிக் கொண்டு அங்கேயே முதலியார் வந்து சேர்வார் என்பதையும் அறிவான். வருகிற முதலியாரும் தக்க ஏற்பாட் டொடுதான் வருவார் என்பதையும் அவன் முன் கூட்டியே அறிவானாதலால், அதைத் தட்டி விடும் வழி யென்ன வென்பதைத் தீர ஆய்ந்து முடிவுகட்டி யிருந்தான். இதனாற்றான் நுங்கம்பாக்கம் கொள்ளை இரவன்று முதலியாரிடம் "தாடிக்காரியிடம் மட்டும் போகாதே" என்று சம்புலிங்கம் எச்சரித்ததாகும்.

போலீஸ் படைகளைச் சேர்ந்த ஒருவருங் காணப்பட வில்லை. முதலியாரோ அல்லது அவருடைய ஆட்களோ யாரும் தென்பட வில்லை. அணிந்திருந்த மாற்றுடையில் தன்னையும் தன் தோழர் களையும் எளிதில் யாரும் அடையாளங் கண்டுகொள்ள முடியா தென்றும் உறுதியாக நம்பினான்.

ஆகவே சட்டெனத் தன் தோழர்களுடன் தாடிக்காரியின் கொட்டகையினுள் நுழைந்தான் சம்புலிங்கம்.

(தொடரும்)

சைவஎல்லப்ப நாவலர்

[திரு, S. அனவரதவிநாயகம் பிள்ளையவர்கள் M. A., L. T.,]

சைவ எல்லப்பநாவலர் பக்தியும் புலமையும் மிக்க சிறந்த தமிழ்க்கவி, அவர் செய்த **அருணாசலபுராணம், திருவருணைக்கலம்பகம், சௌந்தரியலகரியுரை** என்னும் மூன்று நூல்களாலும் அவரைத் தமிழுலகம் நன்கறியும்.

அவர் வரலாறு **திருவெண்காட்டுப் புராணப்பதிப்பில்** பின்வருமாறு உரைக்கப்பட்டது.

"இந்நூலாசிரியராகிய சைவ எல்லப்பநாவலர், திருவெண்காட்டின் தென்மேற்கில் ஒரு கடிகை தூரத்தில் காவிரியின் வடகரையிலிருக்கிற இராதா நல்லூரிலே கார்காத்த வேளாளர் குலத்திலே காலிங்கராய கோத்திரத்திலே பிறந்து, உரிய பருவத்திலே நல்லாசிரியரிடத்தே இலக்கண இலக்கியங்களை நிரம்பக் கற்று, பின் சமய விசேட நிருவாண மென்னும் சிவதீக்ஷைகளைப் பெற்று, தருமபுரவாதீனத்தில் அக்காலத்திருந்த மகா சந்நிதான மூர்த்திகள்பால் சுத்தாத்துவித சைவசித்தாந்த நூல்களைக் கேட்டறிந்து வல்லவராய், அம் மகா சந்நிதான மூர்த்திகளால் திவ்யகவி சைவ எல்லப்பநாவலர் எனப் பெயர் கொடுக்கப்பெற்றவர். இவர் சிவ பெருமானை யன்றி மற்றத் தேவர்களைப் பாடாதவர். இஃது இந் நூற்பாயிரத்திலே

"செப்பமியற் றமிழ்களெல்லா மரியயனே முதலாய
　　தேவர்க் கோதி
யொப்புவிக்க வறியாம லரனிடத்தே வளைத்துவளைத்
　　துரையா நின்றேன்"

என்னுஞ் செய்யுளால் நன்கு புலப்படுகின்றது.

"இவராற் செய்யப்பட்ட நூல்கள்; **அருணாசல புராணம், திருவெண்காட்டுப் புராணம், செவ்வந்திப்புராணம், திருவிரிஞ்சைப்புராணம், தீர்த்தகிரிப்புராணம், திருச்செங்காட்டங்குடிப்**

புராணம், திருவாரூர்க்கோவை, திருவருணைக்கலம்பகம், திருவருணை யந்தாதி முதலாயின. இவரால் உரை செய்யப்பட்ட நூல் சௌந்தரியலகரி."

சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரவர்கள் தமது தமிழ்ப் புலவர் சரித்திரத்தில் எல்லப்பநாவலர் வரலாறெழுதுபவர், 'காலம் மணவாளதாசர் காலம் என்பர்' என்றும், 'சௌந்தரியலகரிக்கு இவரியற்றிய வுரையினாலே இவர், தொல்காப்பியம், நன்னூல், தண்டியலங்காரம் முதலிய இலக்கணங்களையும், தேவாரம், திருவாசகம், சிவஞான சித்தியார் முதலிய நூல்களையும் கற்றவர் என்பது புலப்படுகின்றது' என்றும் உரைத்தார்.

முன் காட்டிய வரலாறு நாவலர் பிறந்தவூர் இராதா நல்லூர் என்று கூற, சௌந்தரியலகரி யுரையாசிரியர் பெயரைக் குறிக்க எழுந்த செய்யுள்

பிறைபுனை தருளுஞ் சிவன்றன துவகைப்
பெருக்கென வடமொழி முனிவ
னறைசவுந் தரிய லகரியைத் தமிழா
லருள்கவி ராசபண் டிதன்ற
னிறைமனங் கருதித் தாழைமா நகரி
னிலைபெற வாழ்கவி யெல்லா
னிறையள வெனினுந் தவறிலா துரைதேர்ந்
தெழுதின னெழில்விளக் கெனவே.

என்று அவர் தாழைமாநகரில் நிலைபெற வாழ்ந்தன ரென்றுரைக்கும். அவர் உரைப் பெருமையைப்பற்றிச் சௌந்தரியலகரியுரைப் பதிப்பில், 'இவ்வரிய நூல் நடைப்போக்கினாலும் பொருள் நுட்பத்தாலும் புலவர்க்கும் விளங்கல் அருமையாயிருந்தது பற்றி உரை எழுதப்பட்டதாகல் வேண்டும். உரையின் சிறப்பை விரித்துரைத்தல் சாத்தியமன்று, ஒரு சிறு வாக்கியத்தில் அடக்கிச் சொல்லின், இவ்வுரை ஒழிவிலொடுக்கத்திற்குச் சிதம்பர சுவாமிகள் உரை போன்றது. பாட்டிற்கு உரை மட்டுமேயன்றி இலக்கணவிசேடங்களும் ஆங்காங்கே விளக்கப்பட்டுள்ளன. சாக்த தந்திர நுட்பங்

களும் வேண்டியவளவு எடுத்துக்காட்டப்பட்டுள்ளன' என யான் எழுதியுள்ளேன்.

தமிழ்ப்புலவர் சரித்திர முடையார் 'நாவலர் மணவாளதாசர் காலமென்பர்' என்றுரைத்ததுமன்றி, மணவாளதாசர் வரலாறு எழுதுமிடத்து, 'இம்மணவாளதாசரும் எல்லப்ப நாவலரும் ஒரே காலத்தவர் என்றும், மணவாளதாசர் தாம் பாடிய **திருவரங்கக் கலம்பக**த்தை எல்லப்ப நாவலர் பார்க்கும்படி அனுப்பினர் என்றும், எல்லப்பநாவலர் அதனைப் பார்த்த பின் தாமும் **அருணைக் கலம்பகம்** என ஒரு கலம்பகம் பாடி அதனை மணவாளதாசர் பார்க்க அனுப்பினர் என்றும், எல்லப்பநாவலர் தேவி **திருவரங்கக் கலம்பகத்தி**லே

வாடி யோட வனச மன்ன னிருகண் வெள்ள மருவிபோன்
 மருவி யோட மதனன் வாளி யருவி யோட வாடையூ
டாடி யோட வன்றி லோசை செவியி லோட வண்டுழாய்
 ஆசை யோடு மெங்கள் பேதை யாவி யோட வீதியோ
மோடி யோட வங்கி வெப்பு மங்கி யோட வைங்கரன்
 முடுகி யோட முருக னோட முக்க ணீசன் மக்களைத்
தேடி யோட வாண னுயி ரம்பு யங்கள் குருதிநீர்
 சிந்தி யோட நேமி தொட்ட திருவ ரங்க ராசரே,

என்னுங் கவியில் வரும் சிவநிந்தையை நோக்கி, அதற்கு மாறாக

கருட னோட மற்ச மாமை கமல மோட முற்கரங்
 காட்டி லோட மூன்றி ராமற் கண்ட மட்டி லோடவே
மருளி வந்த சிங்க மோட வாம னென்பு பாறவே
 வஞ்ச முள்ள கண்ண னோட மார னீறச் சேனனும்
இருளி னோடு முண்ட கத்த னேங்கி யோட வென்றவர்க்
 கீறு ருதங் குயிர ளித்த வேந்தல் யாவன் வேதமே
அருளு மந்த முதல்வன் யாவ னருணை கண்டு வாழ்மினோ
 ஆர நாதி மூல மென்ப தறிகி லாத மாக்களே.

என ஒரு கவிபாடிச் சிவபரத்துவங் கூறினர் என்றும் சிலர் கூறுவர். வேறு கதைகளுங் கூறுவர்' என்றும் உரைத்தனர்.

மணவாளதாசர் திவ்யகவி பிள்ளைப்பெருமாளையங்கார் எனவுஞ் சொல்லப்படுவர். இவரே அஷ்டப்பிரபந்தங்களுக்கு ஆசிரியர். கதைகள் கூறுவோருட் சிலர் இவர்க்கும் எல்லப்பநாவலர்க்கும் ஒரு காலத்தில் வாதம் நிகழ்ந்த தென்றும் அவ்வாதத்தை முடித்தற்கு நடு நின்றோர் இருவரையும் ஒரு ராத்திரியில் கலம்பகம் பாடச்சொல்லினரென்றும், இருவரும் பாடிக்கொண்டு வந்து காட்ட, அன்னார் இருவர் கலம்பகங்களையும் பார்வையிட்டு 'ஐயங்கார் அம்மானையில் அடிசறுக்கினார்' என்றுரைத்தன ரென்றும் சொல்வர். **திருவெண்காட்டுப்புராணப்பதிப்புக்குச்** சாற்றுக் கவியுரைத்தவருளொருவராகிய அஷ்டாவதானம் பூவை கலியாண சுந்தர முதலியாரவர்கள்

"வலமலிபிள் ளைப்பெருமா ளையங்கார் தோல்வியுறு வகையிற் பாடும்
புலமலிநல் லுயர்சைவ வெல்லப்ப நாவலன்றான்"

என்றுரைத்தது இக் கதையைக் கருதியே போலும்.

ஐயங்கார் திருவரங்கக் கலம்பகம்

தேனமருஞ் சோலைத் திருவரங்க ரெப்பொருளு
மானவர்தா மாண்பெண் ணலியலர்கா ணம்மானை
யானவர்தா மாண்பெண் ணலியலரே யாமாகிற்
சானகியைக் கொள்வரோ தாரமா யம்மானை
தாரமாய்க் கொண்டதுமோர் சாபத்தா லம்மானை.

[சாபம் - சபிப்பு, வில்.]

நாவலர் அருணைக்கலம்பகம்

நாரா யணனறியா நாதரரு ணேசருக்கு
வாரார் சிலைகலைமெய் மாதங்க மம்மானை
வாரார் சிலைகலைமெய் மாதங்க மாமாயின்
ஆராயுங் காலெடுப்ப தையமன்றோ வம்மானை
அன்னமறி யாரெடுப்ப தையமோ வம்மானை.

[மாதங்கம் முப்பொருட் சிலேடை. சிலை மாதங்கம் - வில் பெரிய பொன்மலை; கலை மாதங்கம் - உடை யானைத்தோல்; மெய் மாது அங்கம் - அங்கம் மாது பாதியான அங்கம். ஐயம் - பிச்சை, சந்தேகம். அன்னம் - சோறு, அன்னப்பறவை (பிரமன்).]

அஷ்டப்பிரபந்தம் மூலமொன்று பதிப்பித்த திரு. கல்குளம் குப்புசாமி முதலியாரவர்கள் பி. ஏ. தாம் அப்பதிப்பிற்கு முன் எழுதிச் சேர்த்துள்ள பிள்ளைப்பெருமாளையங்கார் சரித்திரத்துள் 'ஐயங்கார் கலம்பகம் பாடியவுடன் அந்நூலை நாவலருடைய பார்வைக்கு அனுப்ப, அவர் அதனை வாங்கி நோக்குங்கால் அம்மானைச் செய்யுளைப் பார்த்தவுடன் "ஐயங்கார் அம்மானையில் அடி சறுக்கினார்" என்று சொல்லி, தாம் உடனே திருவருணைக்கலம்பகம் பாடி முடித்து அன்றிரவே அதனை ஐயங்காருக்கு அனுப்பினாரென்றும் அவ்வருணைக் கலம்பகத்தைப் பார்த்து ஐயங்கார் மிகக் களித்தனரென்றும் சொல்லுப' என்றனர்.

இக்கதை யுண்மையேயென்று உறுதியாக வுரைக்கவியலாதாயினும் ஐயங்கார் அம்மானையைக் குறை கூறினாருளர் என்பது அஷ்டப்பிரபந்தத்திற்கு விரிவானவுரையியற்றி வெளியிட்ட வை. மு. சடகோபராமாநுஜா சாரியாரவர்கள் முதலியோர் தாம் எழுதிய பிள்ளைப் பெருமாளையங்கார் வரலாற்றில், 'ஒரு சாரார் 'ஐயங்கார் அம்மானையில் அடி சறுக்கினார்' என்று குறை கூறுவது சிறிதும் சரியன்று; திருவரங்கக் கலம்பகத்திலுள்ள "தேனமருஞ் சோலை" என்ற தொடக்கத்து அம்மானைச் செய்யுளினது ஈற்றடியின் பிற்பகுதியிற் பொருந்திய சிலேடைப் பொருள் நயத்தையும் சரித்திர வமைப்பையும் ஆழ்ந்த கருத்தையும் ஊன்றி நோக்குமிடத்து, அங்ஙனம் இழித்துரைப்பாரது பழிப்புரை வெற்றுரையேயாமென்பது தெற்றென விளங்கும். அன்றியும், அக்கூற்று அழுக்காற்றினாலாகியதே போலும்; அந்த அம்மானைச் செய்யுளின் அருமை பெருமைகள் இங்கு விரிப்பிற்பெருகும்' என்று கூறிப் பின்னும் அவ்வம்மானைச் செய்யுளுக்கு உரை யெழுதுங்கால், 'இச் செய்யுளில் "ஆண் பெண் ணலியலர்" முதலாக எடுத்துக் கூறிய சொற்றொடர்களின் சாதுரியத்தையும் ஆழ்ந்த பொருள் நுணுக்கத்தையும் சிலேடைப் பொருளின் நயத்தையும் கருதாது ஆசிரியர் மீது அழுக்காற்றினாற் குற்றங் கூறுவது சிறிதும் பொருத்தமில்லாதொழியு மென்க' என்று கூறியதால் தெளிவாகும். கலம்பக நூல்களுட் காணப்படும் அம்மானைச் செய்யுட்கள் பலவற்றை ஒப்பு

நோக்குவோர் ஐயங்கார் அம்மானைச் செய்யுளின் இயல்பை யறிவ ராதலால் இங்கு அதனை விரித்தல் வேண்டாத தொன்று.

ஐயங்கார் அம்மானைக்கும் நாவலர் அம்மானைக்குமே ஏற்றத் தாழ்வு உரைக்கப்பட்டதாயின், இவர்கள் காலங்கள் அவ்வுரை யைப் பொய்ப்படுத்தும் போலும். அஷ்டப்பிரபந்த வுரைப்பதிப்பு [சகம் 1836] ஐயங்கார் வரலாறு, 'இவர் ஸ்ரீ பகவத் ராமாநுஜா சார்யரென்கிற ஸ்ரீ பாஷ்யகாரரது அந்தரங்க சிஷ்யரான கூரத் தாழ்வானுடைய குமாரராகிய ஸ்ரீபராசர பட்டரது சிஷ்ய ராதலாலும், அந்தப்பட்டரது திருவவதாரம் சாலிவாகனசகாப்தம் ஆயிரத்து நாற்பத்தைந்தில் என்று தெரிதலாலும், இவரது காலம் இற்றைக்குச் சற்றேறக் குறைய எழுநூற்றறுபது வருஷத்துக்கு முன்னராகின்றது. இவரை ஸ்ரீ பாஷ்யகாரரது ஸ்ரீ பாதத்தி லாசிரயித்தவர்களுட் பிரதானரும் இராமாநுச நூற்றந்தாதி அரு ளிச் செய்தவரு மாகிய திருவரங்கத் தமுதனாரது திருக்குமார ரென்று பலரும் திருப்பேரனா ரென்று சிலரும் வழங்கி வருவதும் கீழ்க் கூறிய காலக்கணக்கையே வற்புறுத்தும் என்றுரைப்பது ஒப்பத்தக்கதாயின் நாவலர் ஐயங்கார் காலத்தவ ரல்ல ரென்பது உறுதி. இவர் காலம் எங்கும் வரையறுத்துரைக்கப்பட்டிலதாயி னும் மூந்நூறு ஆண்டுகட்கு முற்பட்டதாகா தென்பதே புலவர் பலரும் ஒப்பிய கொள்கை. இவ்வாறு இவ்விருவர் காலமும் வேறு வேறாயின் 'ஐயங்கார் அம்மானையில் அடிசறுக்கினார்' என்னும் சொல் நாவலரைப்பற்றி எழுந்ததன்று என்று ஏற்படும். மற்று அச்சொல் வழங்கிற் றென்பது அஷ்டப் பிரபந்த வுரைகாரர் அதனை யெடுத்து மறுத்தலால் தெளிவாகின்றது. இனி, இருவர் புலவரும் ஒரே காலத்தவர் என்போர் கி. பி. 1623 முதல் 1659 வரை மதுரையை யாண்ட திருமலை நாயக்கரிடம் பிள்ளைப்பெரு மாளையங்கார் ராயச வேலையிலமர்ந்திருந்தார் என்று வழங்கும் ஐதிகத்தைத் தமக்காதாரமாகக் கொள்வர்.

அருணாசல புராணப் புதிய பதிப்பொன்று [1926] எல் லப்பநாவலர் வரலாறுரைக்கப்புகுந்த விடத்து இக்கலம்பக வாதக் கதையைக் கால முரண் ஏற்படாவாறு சிறிது மாற்றியுரைக்கும்.

ஆயினும் அதுவே உண்மை என்று துணிந்துரைத்தல் கூடாது. இடர்ப்பாடு நோக்கிக் கதை மாற்றி யுரைக்கப்பட்ட தென்பது தெளிவாயிருக்கின்றது. 'இவர் தருமபுர ஆதீனத்து மடாலயத்திலே பல புலவர்களோடு சம்பாஷித்துக்கொண் டிருக்கையில், அங்கு வந்திருந்த ஓர் வைணவப்புலவர் திருவரங்கக் கலம்பகத்தி லுள்ள சில செய்யுட்களைச் சொல்லிப் பொருள் விரித்து இத்தகைய செய்யுட்களைச் செய்வார் இக்காலத்தி லொருவரு மிலர் என்று கூறினர். அதனைக் கேட்ட இந்நாவலர் அன்றிரவே திருவருணைக் கலம்பத்தைப்பாடி முடித்து மறுநாட் காலையிற் படித்துக் காட்டிப் பொருள் கூறினர். அதனைக்கேட்ட வைணவப்புலவரும் அங்கிருந்த சைவப்புலவர்களும் ஆச்சரிய முற்று நாவலரது கல்வித்திறத்தை மெச்சிப் புகழ்ந்தனர்' இன்னும் அவ்வரலாறு 'இவர் கற்பில் அருந்ததியையுங் கல்வியில் அவ்வையையும் அழகில் இலக்குமியையும் ஒத்த ஒரு பெண்ணை மணந்து இல்லறம் நடத்தி வந்தனர்' என்றும், 'இவர் போலவே சிவபெருமானிடத்துப் பேரன்பு வாய்ந்த இவரது மனைவியார் திருவரங்கக்கலம்பகத்திலேயுள்ள "வாடி யோட" என்னுஞ் செய்யுளில் சைவதூஷணம் மிகுந்திருத்தலைக்கண்டு நெடுநாளாக மனத்தில் கவலையுற்றிருந்ததால் அம்மாது சிரோமணி இவர் கலம்பகம்பாடிய இரவில் "கருடனோட" என்னுஞ் செய்யுளைச் செய்து அக்கலம்பகத்தில் சேர்த்துக் கொள்ளச் சொன்னதாயும், யாது காரணத்தாலோ நாவலர் அச் செய்யுளைக் கலம்பகத்தில் சேர்க்கவில்லை யென்றும் ஒரு சரிதம் கர்ணபரம்பரையாய் வழங்குகின்றது' என்றும் உரைக்கும். இப் பிற்கதையினைத் திரு. கல்குளம் குப்புசாமி முதலியாரவர்கள் 'இத் தாழிசையை எல்லப்ப நாவலருடைய மனைவி கண்டு ஐயங்கார் சிவபிரானையும் அவர்தங் குமாரர் முதலாயினோரையும் இவ்வாறு இழித்துக் கூறினதற்கு வெகுண்டு, தான் அதைப் போன்ற ஒரு செய்யுள் [கருடனோட] செய்து அதனை அருணைக் கலம்பகத்துட் சேர்க்கும்படி வேண்டலும் நாவலர் அதன் பொருளும் மனைவியின் குரோதமுங் கண்டு அவ்வாறு செய்திலரென்ப' என்று எழுதினர்.

திருவெண் காட்டுப் புராணத்திறுதிச் செய்யுளில் 'காலஞ் சரமமரு மீசர் பேரிலே காலிங்கனுரை புராணமும் வாழியே' என்

னும் ஏற்றடி நாவலர் காலிங்கராய கோத்திரத்தா ரென்பதை யுணர்த்த வந்தது போலும். அப்புராணப் பாயிரத்துள் நாவலர் மெய்கண்ட தேவர்க்கு வணக்கஞ் சொல்லு முகத்தால் அவர் சரித்திரத்தை யுரைத்தலின் அவர் காலம் பதின் மூன்றாம் நூற்றாண் டுக்குப் பிற்பட்ட தென்று கொள்ள வேண்டும். அவர் தருமபுரவா தீனத்துச் சைவ சித்தாந்த சாத்திரங் கற்று அவ்வாதீனத் தலைவரா லேயே திவ்யகவி நாவலர் முதலிய பெயர்கள் கொடுக்கப் பெற் றனர் என்று வரலாறு உரைத்தலால் அவர் காலம் தருமபுர வாதீ னம் ஏற்பட்ட கி. பி. 1450க்கு முற்பட்டதாகாது, மற்று இன்ன ஆதீனத்தலைவர் காலத்திலேயே நாவலர் இருந்தாரென்று உரைக்கக்கூடுமாயின் அவர் காலத்தை இன்னும் அறுதியிட்டுரைக் கலாம்.

எல்லப்ப நாவலரை 'திவ்யகவி சைவ எல்லப்ப நாவலர், என் றழைத்ததன் நோக்கமென்ன? 'திவ்யகவி' யென்பது அவர் இறை வன் றிருவருள் வலிகொண்டு பாடிய வரகவி, மற்றைச் சாமானிய கவிகளோடு சேர்த்தெண்ணுந் திறத்தரல்ல ரென்பதை யுணர்த்தும். பிள்ளைப்பெருமா ளையங்காரையும் 'திவ்யகவி' யென வழங்குதல் கவனிக்கத்தக்கது. 'சைவ' என்னும் அடை அவர்க்குச் சைவ சமயத்தின்கணுள்ள பற்று மிகுதியைக் காட்டும். அவர் **திருவரு ணைக் கலம்பகத்தில்**

சைவத்தின் மேற்சம யம்வே றிலையதிற் சார்சிவமாந்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்த்திருத் தேவார முந்திரு வாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர்பொற் றாளெம் முயிர்த்துணையே.

என்றுரைத்த தொன்றுமே அவர்க்கு அப்பெயர் தகுமென் றுணர்த் தாதோ? 'நாவலர்' என்பது ஆசிரியர் சொல் வன்மையுடையார் என்பதைக் காட்டும். அவர்க்குத் தருமபுரவாதீனத் தலைவர் அப் பெயரை வழங்கினாற் போலவே பிற்காலத்தும் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர்க்குத் திருவாவடுதுறை யாதீனத்தலைவர் அவர் பிரசங்க சாமர்த்தியத்தைக் கண்டு வியந்து அப் பெயரளித்த தாகச் சொல்லப்படுகின்றது.

(தொடரும்)

தும்பைத் திணை

தும்பைத் திணை

இளவழகனார்

ஆர்ப்புஎழுந்த ஞாட்பினுள் ஆள்ஆள் எதிர்த்துஓடித்
தாக்கி எறிதர வீழ்தரும் ஒண்குருதி
கார்த்திகைச் சாற்றிற் கழிவிளக்கைப் போன்றனவே
போர்க்கொடித் தானைப் பொருபுனல் நீர்நாடன்
ஆர்த்துஅமர் அட்ட களத்து.

(களவழி நாற்பது, கஎ.)

'போர்க்கொடியைப் பொருந்திய சேனையையுடைய அலை மோதும் புனல்மிக்க காவிரி நாட்டினனான செங்கட்சோழன் போரில் ஆரவாரித்து மாற்றாரைக் கொன்ற பொருகளத்தில், ஆரவாரம் மிகுந்த அப்போரின்கண் ஆளும் ஆளும் எதிர்த்தோடி ஒருவரை யொருவர் தாக்கிப் படைகளை வீசுதலால் அவருடம்பி னின்றும் ஒழுகாநின்ற செந்நீர்த்துளிகள் கார்த்திகைத் திருவிழா வில் வைக்கப்படும் நிரைவிளக் கொளிகளை யொத்திருந்தன' வென்பது.

எழுந்த, மிகுதியை யுணர்த்தா நின்றது; 'ஒண்குருதி' யென்றார், நிறத்தின் விளக்கம் புலனாதற்கு. மிகுதிப் பொருளில் வருங் கழியென்பது ஈண்டு, மிகுதியாய்க் காணப்படுங்கால் ஏற் படும் நிரையினை விளக்கிற்று. பொருநரு டம்பினின்று மொழு குஞ் செந்நீர்த் துளிகள் விளக்கு நிரைகளின் சுடர்ப் பிழம் புகளை யொத்திருந்தன வென்னும் உவமையழகு பெரிதும் உணர்ந்து மகிழற்பாலது. சாறு; விழா, இச்சொல் இப்பொருட் டாதலைச் 'சாறயர்களத்து' என்னுஞ் * சிலப்பதிகாரத் தொடரானு முணர்க. கார்த்திகை நாளன்று நிரைநிரையாக விளக்கிட்டு விழாக் கொண்டாடுந் தமிழர் வழக்கம் பண்டுதொட்டே நிக ழுமுண்மை,

"குறுமுயன் மறுநிறங் கிளர மதிநிறைந்
தறுமீன் சேரு மகலிரு ணடுநாண்

---

* சிலப், கடலாடு, கசுஉ.

மறுகுவிளக் குறுத்து மாலை தூக்கிப்
பழவிறன் மூதூர்ப் பலருடன் றுவன்றிய
விழவுட னயர வருகதில் லம்ம."*

என்னும் நக்கீரரது அகப்பாட்டிலும் மிகவும் விளக்கமாய்க் கூறப்பட்டிருக்கின்றது. நீர்நாடு, சோழநாடு; காவிரியாற் பெற்ற பெயர். களத்து உருபுதொகச் சாரியை நின்றது. இக்களவழிப்பாட்டு, பொருநரை அமர்க்களத்திற் படையெறிந்து கோறல் நுவலலின், இஃது 'ஒள்வாள் வீசிய நூழிலு' † மென ஆசிரியர் தோல்காப்பியனார் யாப்புறுத்து நிறுத்திய நூழிலாட்டென்னுந் தும்பைத்திணைத் துறைக்கண் அடங்குமென்க. இதனையே பாடாண் டிணைப்படுத் துரைப்பின் அது வேறாம்.

தும்பை யொழுக்கமென்பது போர்செய்தலாம். எனவே அரசரும் அல்லது அவரேவல் கேட்கும் மறவருந் தம்முண் மாறுபட்டுப் போர்செயு மிடமெல்லாம், ஆண்டவர்க்குத் தும்பையொழுக்கமுண்டென்றறியப்படும். மறவர் முதன்முதல் ஆநிரைகொண்ட காலத்திலும், பின்னர்க் கறுவெண்ணங்கொண்டு பகைமேற்சென்ற காலத்திலும், மதில்வளைத்த காலத்திலும் ஆங்காங்கு மவர்க்குப் போர்நிகழ்ந்தன. அப்போரொழுக்க மெல்லாமுந் தும்பை யொழுக்கமென்று துணிதல்வேண்டும். ஆனால் அவையெல்லாம் முறையே வெட்சிப் புறத்துத் தும்பை யெனவும், வஞ்சிப் புறத்துத் தும்பை எனவும், உழிஞைப் புறத்துத் தும்பை யெனவுங் கூறப்படும். ஏனென்றால் நிரைகோடலேதுவாகப் போர்நிகழலின், அப்போர் நிகழ்ச்சி 'வெட்சிப் புறத்துத் தும்பை'யெனப்பட்டது. மேற்செல்லல் ஏதுவாகவும் மதின்முற்றுதலேதுவாகவும் போர் நிகழ்தலின், அவை வஞ்சிப்புறத்துத் தும்பையெனவும் உழிஞைப் புறத்துத் தும்பையெனவுங் கூறப்பட்டன. ஆனால் இனி நிகழும் போர் நிகழ்ச்சி அங்ஙனம் பிறிதோரேது நிகழுங்காலத்தில் உடன் நிகழ்வதன்றித் தானே தனித்து நிகழ்வதாகும். ஆதலாற்றான் இவ்வொழுக்கம் வெறுந் தும்பையெனவே கூறப்பட்டது. இத் தும்பை யொழுக்கத்தில் மறவர்க்கும் அரசர்க்கும் முதன்மையாகப்

* அகநானூறு, கசக. † தொல், புறத், கஎ.

பயன்பட்டு நிற்பது அவரவர் வலிமையேயாகும். இவ் வலிமையில்லாக்கால் இவர்தமக்குட் போரும் நிகழ்தலில்லை. இத னாற்றான் ஆசிரியர் தொல்காப்பியனார்,

> "மைந்து பொருளாக வந்த வேந்தனைச்
> சென்றுதலை யழிக்குஞ் சிறப்பிற் றென்ப."*

வென்று நூற்பாவியற்றித் தும்பைத்திணைக் கருத்தை நன்கு விளக்கினர். இந்நூற்பாவில் மைந்து பொருளாகத் தலை யழிக்குஞ் சிறப்பிற் றென்றமையால், வஞ்சனையாற் பொருதலும் ஆணைமொழியாற் பொருதலும் முதலாயின தும்பைத் திணைக் குச் சிறப்பாகாவென்பது பெறப்படும். இவற்றை விளக்குதற்கே ஆசிரியர் மைந்து பொருளாக வென்று விதந்தியற்றியதூஉ மென்க. இனி இத் தும்பையொழுக்க மென்பது, வந்த வேந்தனும் எதிர் சென்ற வேந்தனும் ஒரே செயலாய் மேற்கொள்ளப்படுகின்ற மையின், அவ்விருவ ரொழுக்கமுந் தும்பையொழுக்கமே யாயிற்று. ஆசிரியரும் 'இருபாற்பட்ட வொரு சிறப்பின்றே' † யென்று இவ் வுண்மையை மேல் நூற்பாவிற் கிளந்தோதினர். பகைகொண்ட மன்னர் இருவகையினரும் இவ்வாறு தத்தம் மறவர் முதலான படைகளுடன் பொருகளங் குறித்துச் சென்று வலிமையே இடை யீடாக நின்று பொருதலென்னும் ஓரொழுக்கமே யுடையராய் ஒருவரையொருவர் தாக்கிக் கொடும்போர் புரிதலே தும்பைத் திணைக் கருத்தாதல் கண்டுகொள்க.

இனி இத்திணைக்குத் தொல்காப்பியனார் பன்னிரண்டு துறைகள் கூறுவார்.

> "தானை யானை குதிரை யென்ற
> நோனா ருட்கு மூவகை நிலையும்;
> வேன்மிகு வேந்தனை மொய்த்தவழி யொருவன்
> றான்மீண் டெறிந்த தார்நிலை யன்றியு;
> மிருவர் தலைவர் தபுதிப் பக்கமு;
> மொருவ னொருவனை யுடைபடை புக்குக்
> கூழை தாங்கிய வெருமையும்; படையறுத்துப்

* தொல், புறத், ௧௩.
† ,, ,, ௧௬

பாழி கொள்ளு மேமத் தானும்;
களிறெறிந் ததெதிர்ந்தோர் பாடும்; களிற்றொடு
பட்ட வேந்தனை யட்ட வேந்தன்
வாளோ ராடு மமலையும்; வாள்வாய்த்
திருபெரு வேந்தர் தாமுஞ் சுற்றமு
மொருவரு மொழியாத் தொகைநிலைக் கண்ணும்;
செருவகத் திறைவன் வீழ்ந்தெனச் சினைஇ
யொருவன் மண்டிய நல்லிசை நிலையும்;
பல்படை யொருவற் குடைதலின் மற்றவ
னொள்வாள் வீசிய நூழிலு முளப்படப்
புல்லித் தோன்றும் பன்னிரு துறைத்தே."*

யென்பது. இவற்றுள் தானைப் போர்நிலையும், யானைப்போர் நிலையும் குதிரைப் போர்நிலையு மென்னும் மூன்றும் மூன்று துறைகளாகக் கூட்டிக் கணக்கெண்ணிக் கொள்க. இனித் 'தானை' யென்பது மறவர்கள் போர்செய்யும் நிலையாம். தும்பைத் திணைத் தொடர்பாய் இம்மறவர்களுக்கு நிகழும் நிகழ்ச்சிகளெல்லாம் 'தானை' யென்னும் இத் துறைக்கண் அடங்கும். போர்க்கெழுகின்ற வீரர் அப் போர்நிகழ்ச்சிக் குரிய தும்பைப்பூவைத் தலைமிசை யணிந்து வீரக்களிப்புந் துணிவுமுடையவராய் அரசனாற் செய்யப்படுஞ் சிறப்புகளை யேற்றுக்கொண்டு அவனையும் அவனுக்குத் துணையாய் வந்த ஏனையரசர்களையும் வாழ்த்திப் போர்க்களஞ் சென்று அவண் கீழ் நின்றும் அல்லது குதிரை முதலியவற்றின் மேலூர்ந்தும் பகைவரைப் பொருள்செய்யாது படையெறிந்தும் அன்றிக் கைகலந்தும் புறங்கொடாமற் பொருதலே தானையின் செயலென்க. வீரர் பூச்சூடுதலைத் தும்பை யென்றொரு துறையாகவும், பின்னரவர்கள் எழுச்சியுடையராய் அரசன் செய்யுஞ் சிறப்புகளையேற்றுப் புறப்பட்டுச் செல்லுதலைத் தும்பையரவ மென்று மற்றொரு துறையாகவும் இத் தானைத் துறைக்கு வேறாகப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும். போர் நிகழ்த்தும்போது மறவர் தும்பைப் பூ வணியு முண்மையை, ஆசிரியர் நச்சினார்க்கினியர் அதனைப் 'போர்ப்பூ' † வென்றே **மதுரைக் காஞ்சி** யுரையில் உரை

---

* தொல், புறத், கஎ † மதுரைக் காஞ்சி, ௫௬௬.

கூறுதலின் வைத்தும் உணர்ந்துகொள்க. போர்க்கெழும்போது அரசன் வீரர்க்குப் போர்வெல்லும் அடையாளமும், பல ஊர்களை யுடைய சிறுநாடும், மிகுந்த பணமும், மருத நிலமும், யானையுங், குதிரையும் முதலாயின வழங்கிச் சிறப்புச் செய்வானென்பது

"வெல்பொறியு நாடும் விழுப்பொருளுந் தண்ணடையுங்
கொல்களிறு மாவுங் கொடுத்தளித்தான்—பல்புரவி
நன்மணித் திண்டேர் நயவார் தலைபனிப்பப்
பன்மணிப் பூணான் படைக்கு"*

என்னும் புறப்பொருள் வெண்பாமாலைப் பாட்டாற் பெறப்படும்.

இனி யானையுங் குதிரையும் மாற்றார் படைமேற் றுக்கிய படியாய்ப் போர்செய்தலே 'யானை நிலை'யுங் 'குதிரை நிலை'யுமென் னுந் துறைகளாம், யானைப்படையுங் குதிரைப் படையும் போரிற் கலந்து போர்செய்யு முண்மையைப்,

"பரும வினமாக் கடவித் தெரிமறவ
ரூக்கி யெடுத்த வரவத்தி னார்ப்பஞ்சாக்
குஞ்சரக் கும்பத்துப் பாய்வன குன்றிவரும்
வேங்கை யிரும்புலி போன்ற புனனாடன்
வேந்தரை யட்ட களத்து"†

என்னும் பொய்கையாரியற்றிய களவழிப் பாட்டினால் நன்கு தெளியலாம். தேர்ப்படை தானே வீரவுணர்ச்சி கொண்டு பொருத லின்மையின், ஆசிரியர் அதற்கொரு தனித்துறை வகுத்திற்றி லர். குதிரையானன்றித் தேர் தானே செல்லாமையாற் றேர்க்கு மற மின்றென்று அது கூறாராயினார்'‡ என்று நச்சினார்க்கினியரும் இதனை எடுத்துக் காட்டினார். ஆனால் வெண்பாமாலைகாரர் இவ் வியற்கை நிலையை எண்ணிப்பாராமல், 'தேர்மற' மென்று மொரு துறை வகுப்பார். இயற்கைத் தன்மைகளைச் செவ்வையாய் உற்றுநோக்கி அவையுள்ளவாறே உரை நிறுத்தி நூலியற்றுதலென் பதே பண்டைக்காலத் தமிழ்ப்பெரும் பனுவல்களுக்கும், பின்றைக் காலப் பனுவல்களுக்குமுள்ள முதன்மையான வேறுபாடாகும்.

---

* புறப்-வெ, தும்பைப், உ. † களவழிநாற்பது, கசு.
‡தொல், புறத், கஎ.

மேலும், ஆசிரியர் தொல்காப்பியனார் தானை யானை குதிரைகட்குத் துறைவகுக்கு மிடத்துத்

"தானை யானை குதிரை யென்ற
நோனா ருட்கு மூவகை நிலையும்"

என்று ஏற்ற பெற்றிச் சொற்பெய்து மிகவிழிப்பாய் நூற்பா வியற்றி அவற்றின் நிலை கூறினார். எனவே 'தானைநிலை' 'யானைநிலை' குதிரைநிலை' யென்பனவே ஆசிரியர் வகுத்த துறைகளா மென்க. 'இனி இவைதாமே கறுவுகொண்டு பொருவுழித் தானைமறம் யானைமறங் குதிரைமறமென்று வெவ்வேறு பெயர்பெறு மென்று கொள்க' வென நச்சினார்க்கினியர் அந்நூற்பாவுக்கு உரைநிறுத்து தலின், உணர்ச்சியில்லாதவழி உணர்வுடைப் பொருள்களான தானைக்கும் யானைக்குங் குதிரைக்குமே மறமென்று கூறல் இயை யாதென்பது நன்கு விளங்கும். விளங்கவே, அத் தானை முதலிய வற்றைப் போல உணர்வுடைப் பொருளல்லாத தேருக்கு மறங் கூறித் 'தேர்மற' மென்பதோர் துறைவகுத்தல், இயற்கை யுண்மை களோ டியையாதென்பது கூறல்வேண்டா வென்க.

இனி வேந்தனுக்குத் துணையாய் வந்த துணையரசருஞ் சேனைத் தலைவரும் அவ்வேந்தனை மாற்றார் சூழ்ந்து கொண்டமை கண்டனராயின் அவர் அங்கு முற்பட்டுச் சென்று அம்மாற்றா ரைப் படையெறிந்து தாக்குதல், 'வேன்மிகு வேந்தனை மொய்த்த வழியொருவன் றான்மீண் டெறிந்த தார்நிலை'யென்னுந் துறையாம். தாரென்பது முற்பட்டுப் பொரும் படையாதலின் இத்துறை தார் நிலையெனப்பட்டது. இங்ஙனம் முன்சென்று பொருகின்ற இரு வகைப் படைத்தலைவரும் ஒருகால் இறப்பினும் இறப்பர்; அவ் வாறு நேருமாயின் அஞ்ஞான்று அஃது 'இருவர் தலைவர் தபுதிப் பக்க'மென்னுந் துறையாமென்க. இதன்கண் படைத்தலைவரே யன்றி வேந்தரிருவருமே வீழ்ந்துபடுதலு முண்டென்பது 'பொரு படை களத்தவிய இருவேந்தரு மிகலவிந்தன்று', 'வேந்தரிரு வரும் விண்படர' வென்று வெண்பா மாலையில் 'இருவருந் தபுநிலை' யென்னுந் துறைக்கீழ்க் கூறப்படுகின்றது.* போர்க்கு உடைந்து தன் படைகள் நிலை தளர்ந்தமை காணும் படைத்தலைவனொருவன்

* புறப்-வெ. தும்பை, ௧௨.

அப் படைமுன் சென்று மாற்றார் படைத்தலைவனை அவனது பிற் படையோடு தாக்கி எருமைக்கடாப்போல் மதியாது நிற்கு நிலைமை 'ஒருவனொருவனை யுடைபடை புக்குக் கூழை தாங்கிய பெருமை' யென்னுந் துறை யெனப்படும். எதனையும் பொருள் செய்யாது நிற்றலே எருமையின் இயல்பாதலின், மாற்றார் படையை யுடைத்து அப்படைத்தலைவனைச் சிறிதும் பொருள் செய்யாது நிற்கும் வீரனது நிலை 'எருமை நிலை' யெனப்பட்டது. இவ்வியல்பினைக் 'கடாப் போலச் சிறக்கணித்து நிற்கு நிலைமைக்கண்ணு' மென்னும் நச்சினார்க்கினியருரையிலும் விளங்குதல் காண்க.

இனி வேல் முதலிய படைக்கருவிகள் கொண்டு போர் விளைக்கும் மறவர் அக்கருவிகளை நீக்கி உடம்பினாற் போர் செய்யும் மற்போரும் நிகழ்தலுண்டு. இத்துறையை ஆசிரியர் 'படையறுத்துப் பாழி கொள்ளும் ஏமம்' என்று உரைப்பர். பாழியென்றது வலிமையை. அஃதீண்டு ஆகுபெயராய் மற்போரைக் குறித்தது. மற்போரில் மிகவும் வல்லவனான வீமனையும், அவனது மற்போரைக் குறிக்குங்

"கொல்லேறு பாய்ந்தழிந்த கோடுபோற் றண்டிறுத்து
மல்லேறு தோள்வீமன் மாமனைப்—புல்லிக்கொண்
டாறாத போர்மலைந் தாங்கரசர் கண்டார்த்தா
ரேறாட லாய ரென"

வென்னும் பாரத வெண்பாவையும் இங்கு நினைவு கூர்க. 'பாழி கொள்ளும் ஏம' மென்னும் இத்துறை புறப்பொருள் வெண்பா மாலையில் 'ஏமவெருமை' யென்னுந் துறையாகக் காணப்படுகின்றது. வெண்பாமாலை யுரையாசிரியரும் இதைக் குறிப்பிட்டார். மாற்றார் யானையைப் படையெறிந்து அவ்வியானைமே லூர்ந்துவரும் படைத்தலைவனை எதிர்த்த போர்வீரர் அவ்வியானையோடு இறந்துபடுதல் 'களிறெறிந்து எதிர்ந்தோர் பாடு' மென்னுந் துறையென்க. ஈண்டுப் பாடென்றது அழிவென்னும் பொருளது; இங்ஙனமே ஆசிரியர் இளம்பூரணரும் 'களிறு எறிந்து எதிர்ந்தோர் பட்ட வழியும்' என்று உரை கூறினர். இத்துறையைப் புறப்பொருள்

வெண்பாமாலை 'களிற்றுடனிலை' யென்னும் பெயரால் வகுத்து அதன்கீழ் ஆசிரியர் இளம்பூரணர் கூறிய இறந்துபட்ட கருத்தையே நிறுத்தி

'ஒளிற்றெஃகம் படவீழ்ந்த
களிற்றின்கீழ்க் கண்படுத்தன்று' *

என்று கொளுவுரைக்கும். இங்ஙனமே இத்துறைக்கண்ணதாய் வரும் 'ஆசாகெந்தை' யென்னும் புறப்பாட்டினுள்ளும் † 'குன்றத் தன்ன களிற்றொடு பட்டோன்' என்று போரெதிர்ந்தோர் இறந்துபட்ட செய்தியே யுரைக்கப்படுகின்றது. இவ்வளவும் 'களிறெறிந்து எதிர்ந்தோர் 'பாடு' என்னுந் தொல்காப்பிய நூற்பாக் கூற்றிலுள்ள 'பாடு என்னுஞ் சொல்லுக்குப் 'பட்ட' தென்னும் பொருளே கருத்தாமென்று நிறுவுதற்குச் சான்றாய் நிற்பவும், நச்சினார்க்கினியர் அச்சொல்லுக்குப் பெருமையென்று உரைகூறி ஆசிரியர் கருதிய துறைக்கருத்தை மாற்றினார். களிறெறிந்து அதன் மேலூர்ந்தாரையும் எதிர்த்துப்பட்டவன் வேந்தனுமாமென்பது, 'களிறெறிந் தெதிர்ந்தோர் பாடு' மென்னும் இத்துறையை அடுத்துக் 'களிற்றொடு பட்ட வேந்தனை' யெனவரும் மறுதுறைத் தொடராலும் விளங்கும்.

இனி அங்ஙனம் களிற்றொடுபட்ட வேந்தனை மாற்றுவேந்தன் படைமறவர் நெருங்கிச் சூழ்ந்துகொண்டு இரக்கத்தால் ஆடுதலும் பாடுதலும் செய்வர். இதனையே ஆசிரியர் 'களிற்றொடு பட்ட வேந்தனை அட்டவேந்தன் வாளோ ராடு மமலை' யென்பர். வெண்பாமாலை 'ஒள்வாளமலை' யென்னும்.

"வலம்படு முரசந் துவைப்ப வாளுயர்த்
திலங்கும் பூணன் பொலங்கொடி யுழிஞையன்
மடம்பெரு மையி னுடன்றுமேல் வந்த
வேந்துமெய்ம் மறந்த வாழ்ச்சி
வீந்துகு போர்களத் தாடுங் கோவே."‡

* புறப்-வெண், தும்மைப், உம.   † புறம், ௬௨௭.
‡ பதிற்றுப், ௫௬.

என்னும் **பதிற்றுப்பத்திலும்** இப்போர்க்களத்தாட்டங் கூறப்படுகின்றது. இத் துறைக் கருத்துப்படி ஒருபக்கத்து வேந்தனும் அவ்வேந்தன் படையாளருமன்றி இருபக்கங்களின் இருபெரு வேந்தரும் அவர்க்குத் துணையாய் வந்த ஏனைத் துணை வேந்தரும் படைத்தலைவரும் படையாளருமாகக் களங்கிட்டிய அனைவரும் எவரும் பிழையாதபடி ஒருங்குபடுதலும் ஒரோவொருகால் நிகழ்தலுண்டு. 'வாள் வாய்த் திருபெருவேந்தர் தாமுஞ் சுற்றமு மொருவரு மொழியாத் தொகைநிலை'யென்று ஆசிரியர் கூறியது மிது, களங்கிட்டிய வேந்தன் முதலான ஆடவரேயல்லாமல், அவரவர் பெண்டிரும் அக் களமணுகித் தந்தங் கணவரெல்லாம் இறந்து கிடத்தல் கண்டு தாந்தாமும் எரிவீழ்ந்திறப்பரென்னுங் குறிப்பும் புறப்பொருள் வெண்பாமாலையில் இத் தொகைநிலைத் துறைக்கண்ணதாய்க் காணப்படுகின்றது* இக் குறிப்புக் 'களங்கொளற் குரியோரின்றித் தெறுவர வுடன்வீழ்ந்தன்று லமரே பெண்டிரும்' † என்று புறநானூற்றில் வருங் **கழாத்தலையார்** பாட்டிற் குறிக்கப்படுதலும் இங்கு நினைவுகூரற்பாலது.

தன் வேந்தன் மாற்றாரால் களத்துப்பட்டானென்பது அறிந்த வீரன் உடனே சினமுங் கறுவெண்ணமு முடையனாய் வேந்தன் இறந்து பட்டனனே யென்னும் வீரவுணர்ச்சியினால் அம்மாற்றாரோடு பொருது உயிர்துறந்த வீரநிலை 'செருவகத்திறைவன் வீழ்ந்தெனச் சினைஇ யொருவன் மண்டிய நல்லிசை நிலை' யெனப்பட்டது. இதனை வெண்பாமாலை 'அவ்வீரன் தனது வாட்படையே துடுப்பாகவும், மானமே நெய்யாகவும், வீரமே சுள்ளியாகவும் வாட்போரே அழலாகவும் அமையத் தனது இன்னுயிரை வேள்வி செய்தா' னென்னும் உருவகத்தால்,

"வான மிறைவன் படர்ந்தென வாடுடுப்பா
மானமே நெய்யா மறம்விறகாத் - தேனிமிருங்
கள்ளவிழ் கண்ணிக் கழல்வெய்யோன் வாளமரொள்ளழலுள் வேட்டா னுயிர்"

என்று மிகவுந் திறமாகக் கூறுவதாயிற்று. இதற்கேற்பவே இத்து

---

* தும்பை, உஅ. † புறம், ௬௨

றைப் பெயருந் 'தன்னைவேட்டல்' என்று அதன்கட் காணப் படுகின்றமை மிகவும் வியத்தற்குரியதென்க. வேந்தனும் வேந்தன் படைஞரும் இவ்வாறு நிலைதளர்ந்து கெடுதலை யறியும் மற்றொரு பக்கத்தார் அவ்வெதிர்ப்பக்கத்தில் எஞ்சியுள்ள ஏனையோரையும் ஒருங்கே கொன்று குவித்தல் 'நூழிலாட்'டெனப்படும். இதனைப் 'பல்படை யொருவற் குடைதலின் மற்றவ னொள்வாள் வீசிய நூழில்' என்றார் தொல்காப்பியனார். 'நூழி' லென்பது 'பலவுயிர் களைக் கொன்று குவித்த' லென்றே பொருளாம். இளம்பூரணரும் 'பலவுயிரை ஒருவன் கொன்றதனை நூழில் என்றுரைத்தல்' என்று உரை கூறினார். புறத்திணையியலுரையில் * ஆக இப்பன்னிரண்டு துறைக்கருத்துகளும் ஏனையவற்றைப்போல ஒருபக்கத்தார்மாட் டே நிகழ்வன வல்லவாய் இருபக்கத்தாருங் கலந்து நிகழ்த்துங் கலப்பு நிகழ்ச்சியில் அவ்விருவர்மாட்டும் ஒரு காலத்தே நிகழும் ஓரொழுக்கமாகலின், இவற்றை ஆசிரியர் புல்லித்தோன்றும் பன் னிரு துறைத்தென்று இத் தும்பைத்திணையை முடித்திட்டா ரென்க!

இனி இத் தொல்காப்பியத் துறைகளுக்கு வேறாகப் புறப் பொருள் வெண்பாமாலையில் வரும் ஏனைத் துறைகளெல்லாம் மேற் கூறிய இப்பன்னிருதுறைகளிலேயே அடங்குமென்பது நுணுகி நோக்குவார்க்கெல்லாம்விளங்காநிற்கும். பட்டாரைப் பாடும்'பாண் பாட்டும்', வீரர்கள் வீரக்களிப்பினால் தேர்முன் ஆடும் 'முன்றேர்க் குரவை'யும், தேர்ப்பின் ஆடும் 'பின்றேர்க்குரவை'யும், தேரின் முன் னும் பின்னுமாகப் பேய்கள் ஆடும் 'பேய்க்குரவை'யுமெல்லாம், 'வாளோ ராடும் அமலை' யாகிய ஒள்வாளமலைக்கண் அடங்கும், வெற்றித்தோற்றம் மிக்க 'தானைநிலைத்' துறையும், ஆண்மைத்தோற் றம் மிக்க 'வெருவருநிலை'த் துறையுங் 'கூழைதாங்கிய வெருமையு' மென்பதன்கண் அடங்காநிற்கும். போர்க்களத்தில் இறந்துபட்ட தங் கணவன்மாரைப் பெண்டிர் சென்று தழுவித் தாமு மிறத்த லான'சிருங்கார நிலை'யும், தங்கணவன்மாரது புண்பட்ட உடம்பைக் கண்டு புறங்கொடாது அங்ஙனம் புண்பட்டிறந்தமைக்கு உவகை

* தொல், புறத், ௧௭.

யும் ஆனால் மண்ணுலகு நீத்தமைக்கு வருத்தமும் அப்பெண்டிர் ஒருங்கே பொருந்திக் கண்ணீருகுக்கும் உவகைக் கலுழ்ச்சியு மெல்லாங் 'தொகைநிலை'த் துறைக்கண் அடங்குமென்க. போர்மறவர்கள் தம்மெய்யிற் பாய்ந்த வேலைப் பறித்து மாற்றார்மேல் விடுத்து அவரைக் கோறல் உணர்த்தும் 'நூழிலாட்' டெனுந்துறை 'நூழி' லிலேயே அடங்குதல் காண்க. மேலும் புறப்பொருள் வெண்பா மாலை இத்தும்பைத் திணைக்கண் அடக்கித் தொல்காப்பியத்துறைகட்கு வேறாகக் கூறுந் துறைகளுட் சிலவற்றைத் தொல்காப்பியனார் வாகைத்திணைக்கண் அடக்கி உரை நிறுத்துகின்றார். அவற்றையெல்லாம் அடுத்த 'வாகைத்திணை'க் கட்டுரைக்கண் விளக்கி உண்மைச் சார்பு தெரிப்பேமாகலின், அவற்றை ஆண்டுக் கண்டு கொள்கவென்பது. 'இனிப் (போர்க்களத்திடையே இறந்துபட்டாரைக் கண்டு) தாயர் கூறுவன மூதின் முல்லையாம், மனைவியர் கூறுவன இல்லாண் முல்லையாம்; கண்டோர் கூறுவன வல்லாண் முல்லையாம்; பாணர் கூறுவன பாண்பாட்டம் என்க' என்று நச்சினார்க்கினியர் தும்பைத்திணைக் கருத்தாகக் கூறும் உரைப்பகுதிப்பொருளும் அக்கட்டுரைக்கண் ஆராய்ந்துரைக்கப்படுமென்க, எனவே அரசர்கள் தமக்குள் மாறு கொண்டு தத்தம் படைகளின் றுணையினாற் போர்செய்யுமொழுக்கமே தும்பையொழுக்க மென்பது பெறப்பட்டது.

இனி இவ்வியல்பினதான தும்பைத்திணை புறப்பொருளொழுக்கமாகலின், இது தனக்கு அகமான நெய்தலொழுக்கத்தோடு நுணுகிப் பொருந்துமாறும் இவண் ஆராய்ந்து தெளிதல் வேண்டும். தும்பையொழுக்கம் நிகழுமிடம் மலைச்சாரலுமாகாது; காடகமுமாகாது; வயற்புறமுமாகாது; மற்றதற்குக் களரும் மணலும் பரந்த வெளி நிலமே வேண்டப்படும்; அத்தகைய வெளிநிலம் கடல் சார்ந்த விடத்தேயிருப்பதல்லது வேறாகாமையின், தும்பையொழுக்கம் நிகழுமிடம் மணல் பரந்த களர் வெளிநிலமான நெய்தல் நிலமேயாமென்க. தும்பையொழுக்கம் நிகழ்வதற்குக் களர் வெளியே வேண்டப்படுமென்பதும், அக்களர் வெளிநிலமாவது கடல் சார்ந்த நெய்தல் நிலமேயா மென்பதும் 'இருபெருவேந்தரும் ஒரு களத்துப் பொருதலின் அதற்கு இடம் காடும் மலையும்

கழனியும் ஆகாமையானும், களரும் மணலும் பரந்த வெளிநிலத்துப்பொருதல் வேண்டுதலானும், அந்நிலம் கடல் சார்ந்த வழியல்லது இன்மையானும்'* என்று ஆசிரியர் இளம்பூரணவடிகள் உரைக்குமாற்றால் இனிதறியப்படும். மேலும் இத்தும்பைத் திணையைப்பற்றி நுவலும் பழந்தமிழ்ப் புறப்பாட்டுகளிலெல்லாம் பெரும்பாலுங் கடலையுங் கடற்புறத்தையும் பற்றிய கருத்துக்களே உவமைப் பொருள்களாக எடுத்துக் காட்டப்பட்டிருத்தலும் போரொழுக்கம் நிகழுமிடம் நெய்தல் நிலமேயாகு மென்பதை வற்புறுத்துவதொரு பெருஞ்சான்றாதல் இங்குப் பெரிதும் நினைவு கூரற்பாலது. நெய்தலுக்கும் இஃதொக்கும்.

இனி இப்போரொழுக்கம் முனைப்பாய் நிகழ்ந்து முடியுநேரம் ஞாயிறு பொழுது படும் போதாகும். அதனை 'எற்பாடு' என்ப ஆசிரியன்மார்; ஆவது பிற்பகல்; இது சிறுபொழு தெனப்படும். ஆசிரியர் தொல்காப்பியனார் நெய்தலுக்கு இச் சிறுபொழுதினை வரைந்தோதினரேயல்லது பெரும்பொழுதினை அங்ஙனம் வரைந்து காட்டினாரல்லர். காட்டாராகவே பெரும்பொழுது ஆறுமே நெய்தற்குக் கொள்ளப்படுமென்று ஆசிரியர் இளம்பூரணரும் † களவியலுரைகாரரும் ‡ கருதினர். ஆசிரியர் நச்சினார்க்கினியர் இவ்வுரையாசிரியர் இருவர் கருத்தினைத் தழுவிக்கொள்ளுதலோடு காரும் இளவேனிலும் வேனிலும் பெரும்பொழுதாமென வேறொன்றுந் துணிந்து 'இவற்றிற்கு அறுவகை இருதுவும் உரியவென்பதன்றிக் காரும் இளவேனிலும் வேனிலும் பெரும்பொழுதாகக் கொள்ப வென்றற்குப் பொருள்பெறத் தோன்றுமென்றார்' என்று எய்தியது ஒருவகை விலக்கிப் பிறிது விதி வகுத்தார். ஆனாற் சிலப்பதிகார உரையாசிரியரான ஆசிரியர் அடியார்க்கு நல்லாரோ வெனின், பெரும்பொழுதைப்பற்றி ஆசிரியர் ஏதுங் கூறாமையாற் றாமும் ஏதுங் கூறலாகாதென்னுங் கருத்துடையராய்க் காணப்படுகின்றார்.⁑ உரையாசிரியன்மார் இவ்வாறெல்லாம் ஏது கூறினாராயினும் ஈண்டு முதன்மையாய் வேண்டற்பாலது ஆசிரியர்

---

* தொல், புறத், ௧௨ † தொல், அகத், ௯ ‡ இறையனு, ௧.
⁑ சிலப், பதிகவுரை.

தொல்காப்பியனர் கருத்தேயாம். ஆசிரியர் பெரும்பொழுது சிறு பொழுதெனப் பொழுதை இருகூறகப் பிரித்து அவற்றை மீண்டுந் தனித்தனி அவ்வாறு பிரிவுகளாகப் பகுத்தோதலின், அப்பிரிவுகள் அவ்வாறுந் தம்முள் ஒன்றற்கொன்று இயைபுடையனவாகவே இருத்தல் வேண்டும். எனவே, மாலை, யாமம், வைகுறு, காலை, நண்பகல், எற்பாடென்னுஞ் சிறு பொழுதுகளாறுங் கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்னும் பெரும் பொழுதுகளாறேடும் முறையே இயைபுடையவாகும் இயற்கையுண்மை ஆராய்ந்து மகிழற்பாலதாமென்க. இவ் வியைபுண்மைகளைப் 'பொருள்வயிற் பிரிவு' என்னும் அகப்பொருட் கட்டுரையிலும், ஏனைப் புறத்திணைக் கட்டுரைகளினும் ஒரு சிறிது விளக்கியிருக்கின்றேம். அவற்றை இங்கு விரித்துரைப்பின் இது மிகவும் பெருகுமாதலின், ஏற்புழி விளக்குதல் கருதி விடுக்கின்றேம். எனவே ஆசிரியர் தொல்காப்பியனர் 'எற்பாடு நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்று'* மென்று நெய்தலுக்கு எற்பாட்டைச் சிறு பொழுதாகக் குறித்துரைத்தலின், அவ்வெற்பாட்டுக்கு இயைபான முதுவேனிற் பருவமே அதுதனக்குப் பெரும்பொழுதாதல் இயற்கையாகும். இங்ஙனமே ஆசிரியர் மருதத்துக்கும் வைகறையும் விடியலுஞ் சிறுபொழுதுகளாகக் கூறிப் பெரும் பொழுதுகள் கூறது விட்டமையின், அவ்வைகறைக்கும் விடியலுக்கும் இயைபான முன்பனிப்பருவமும் பின்பனிப்பருவமுமே மருதத்திற்குப் பெரும்பொழுதுகளாதல் வேண்டுமென்க. அற்றாயின் ஆசிரியர் அவற்றை எடுத்துக் கூறராயினரென்னையோவெனின், அவண் எடுத்துக் கூறுங் கட்டாயமின்றியே அவை எளிதாய்ப் பெறப்படுதலின் கூறராயினரென்க. என்னை? முல்லைக்குரியது காரென்னும் பெரும்பொழுதெனவுங், குறிஞ்சிக்குரியது கூதிரெனவும், பாலைக்கு நண்பகல்வேனிலெனவுங் கூறினமையே,வைகறையும் விடியலுமென்னுஞ்சிறு பொழுதுகளில் நிகழுமெனப்பட்ட மருதத்துக்கும், எற்பாட்டில் நிகழுமெனப்பட்ட நெய்தலுக்கும் முறையே உரிய பெரும் பொழுதுகள் முன்பனி பின்பனி யென்னும் பனிப்பருவங்களும்,

* தொல், அகத், அ,

முதுவேனிற்பருவமுமா மென்பதைக் கூறுமலே எளிதாய் விளக்குதலினென்பது. மேலும் முன்பனி பின்பனி யென்னும் பருவங்களிரண்டும் பனிப்பருவமென்னும் ஒருவகைப்பருவமேயாகும். எனவே இவ்விருவகைப் பனிப்பருவங்களினும் ஒருவகை யொழுக்கம் நிகழ்தலே இயற்கையோடொக்கு மென்பது தெள்ளிதின் விளங்கும். ஈதறிந்தே ஆசிரியரும் இவ்விருபெரும் பொழுதுகளுக்கும் இடையான வைகுறுவும் விடியலுமென்னும் இரண்டு சிறு பொழுதுகளையும் மருதவொழுக்கத்துக்குப் பொழுதுகளாக வரைந்தோதினாரென்றறிந்து கொள்க. வைகறை விடியலென்னும் இரண்டு சிறுபொழுதுகளினும் மருதவொழுக்கம் நிகழுமுண்மையை,

"அணைமென்றோ ளியாம்வாட வமர்துணைப் புணர்ந்துநீ
மணமனையா யெனவந்த மல்லலின் மாண்பன்றோ
பொதுக்கொண்ட கௌவையிற் பூவணைப் பொலிந்தநின்
வதுவையங் கமழ்நாற்றம் வைகறைப் பெற்றதை"*

என்னுங் கலித்தொகையினுங்,

'காலை யெழுந்து கடுந்தேர் பண்ணி
வாலிழை மகளிர்க் கழீஇய சென்ற
மல்ல லூரன்' †

என்னுங் குறுந்தொகையினுங் கண்டு கொள்க. அவ்வாறாயின் இளவேனில் முதுவேனி லென்னும் பருவங்களும் வேனிலென்னும் ஒருவகைப் பருவமேயாகலின், அவ்விரு பருவங்களினும் ஒருவகை யொழுக்கமே நிகழற்பாலதாமெனவும், அதுபற்றியே ஆசிரியரும் 'நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனில்'‡ என்று நூற்பா ஓதி இளவேனில் முதுவேனி லென்னு மிரண்டையும் வேனிலென்னும் பொதுச் சொல்லாற் றழுவி அவ்விருபருவங்களினும் பாலை யொழுக்கம் நிகழுமென ஒரொழுக்க நிகழ்ச்சியே வரைந்தோதினா ரெனவுங் கூறினாலோ வெனின்; அற்றன்று, ஆசிரியர் அந்நூற்பாவில் 'வேனில்நண்பக' லென்னமல் 'நண்பகல்வேனி' லென்று கூறினமையின், அத்தொடர்க்கு நண்பகற் சிறுபொழுதுக்-

---

* மருதக்கலி, ௧ † குறுந்தொகை, ௪௫. ‡ தொல், அகத், ௯.

கியைபான இளவேனிற் பெரும்பொழு தென்பதே பொருளாவதல்லது, நீவிர் கூறுமாறு அவ்வேனில் இருவகை வேனிலையுந் தழுவிற் றன்றென் றறிந்துகொள்க. 'இளவேனில் முதுவேனில் என்னும் இருவகைப் பருவத்தின்கண்ணும் வரும் நண்பகற் பொழுது காலமா' மென்று உரையாசிரியரே கூறினரெனின், உரையாசிரியர் கூறினமையினாலேயே யாமும் அது கூறல் வேண்டுமென்பது கட்டாயமின்று. உரையாசிரியர் கருத்து ஆசிரியர் கருத்தன்றெனக் காணப்படின், யாம் வேறு ஆராயவுங் கடமைப்பட்டிருக்கின்றோம். மேலும், பாலை யொழுக்கத்துக்கு இளவேனிற் பருவமே காலமாக ஆசிரியர் மாமூலனார் 'பனிப்பருவம் நீங்கிய அரிய செவ்வியையுடைய இளவேனி' லென்னும் பொருளில் வர 'அற்சிர நீங்கிய வரும்பத வேனி'* லென்று குறித்துப் பாடிய அகப்பாட்டினையும் இங்குப் பெரிதும் நினைவுகூரற்பாலது. பாலைத்திணைக்கு உரிய பெரும்பொழுது இளவேனிலேயா மென்னுமிவ் வினையின் விரிவு இனிவரும் 'வாகைத்திணை'க் கட்டுரையில் விளக்குதற்கிடம்பெறுதலின், அதனை அங்குக் கண்டுகொள்க. அதுகிடக்க, இருவகை வேனிலும் வேனிலென்னும் ஒருவகைப் பருவமேயாகலின், அவற்றின்கண் ஓரொழுக்கமே நிகழல் வேண்டுமென்னுங் கருத்துறு பொருளே ஈண்டு ஆராய்தற்குரியதாம். பனிப்பருவப் பிரிவுகளான முன்பனிக்காலம் பின்பனிக்காலம் என்பவற்றை விட வேனிற்பருவப் பிரிவுகளான இளவேனில் முதுவேனில் என்பவற்றில் மிகவும் வேறுபாடுண்டு. இளவேனில் முதுவேனிற் பருவங்களை அவைபோல ஓரியல்புடையனவென்று கூறலியலாது. இவ்வுண்மை அவ்வவற்றின் பெயர்களினாலேயே நன்கு விளங்குகின்றது. முன்பனி பின்பனி யென்பன வெறுங் கால முன்பின்னையே குறிக்கின்றன. ஆனால் இளவேனில் முதுவேனி லென்பன அங்ஙனங் கால முன்பின்னைக் குறியாமல் வேனிலின் ஆற்றலை யுணர்த்துவனவாயிருக்கின்றன. இளவேனி லென்பது வெயிற்கொடுமை மிக்குள்ளது. முதுவேனி லென்பது அக்கொடுமை குறைந்துள்ளது. இளவேனிற் பருவம் சித்திரைத்திங்களும் வைகாசித்திங்களுமாம், முதுவேனிற் பருவம் ஆனியும் ஆடியும். இவ்விரு திங்

*அகநானூறு, ௯௭.

கள்களிலும் வெயில் மிகுதியையும் வெயிற்குறைவையும் நிகழ்ச்சியிற் றெரிந்து கொள்ளலாம். எனவே இவ்விருவேறு காலவியற்கைகளும் முன்பனி பின்பனிப் பருவங்களைப்போ லல்லாமல் வேறுவேறியல்புடையனவாமென்பது தெளிவு. தெளிவாகவே, இவ்விரண்டு பருவங்களினும் நிகழும் எல்லா நிகழ்ச்சிகளும் வேறுபாடுடையவாய் வேறுவேறாகுமென்பது கூறாமலே பெறப்படும். ஆகையாற்றான் ஆசிரியர் இளவேனிற் பொழுதைப் பாலையொழுக்கத்துக்கும், முதுவேனிற் பொழுதை நெய்த லொழுக்கத்திற்கும் வகுத்தோதுங் கருத்தினராவ ரென்பது. இக்கோட்பாடு இன்னொன்றானும் உறுதி செய்யப்படுகின்றது! பாலையென்பதும் நெய்தலென்பதுங் கணவனும் மனைவியுந் தம்முள் ஒருவரை யொருவர் பிரிந்து வாடும் வாட்டமாகும். பாலையால் விளையும் வாட்டம் பெரிதாகலின் அதனை வருத்தமென்றும், நெய்தலால் வரும் வாட்டம் சிறிதாகலின் அதனை இரக்கமென்றும் ஆசிரியன்மார் கூறுவர். பொதுவில் இவ்விரண்டொழுக்கங்களும் வருத்தமென்னும் ஒரு கூற்றிலே அடங்குமாயினும், அவை தமக்குள் மிகுதியுங் குறைவும் பற்றி வரும் வேறுபாடு பெரிதாகலின் அவ்விரண்டும் வேறுவேறொழுக்கங்களாயினவென்க. அவற்றைப் போலவே, இளவேனிலும் முதுவேனிலும் பொதுவில் வேனிலென்னும் ஒருவகைப் பருவத்துளடங்குமாயினும் அவை தமக்குள் ஆற்றற்றொடர்பான மிகுதி குறைவுகள் பற்றி ஏற்படும் வேறுபாடு பெரிதாகலின், அவ்விரண்டு பருவங்களும் வேறு வேறு பருவங்களாகக் கொள்ளப்படுமென்க. இளவேனிலின் வெயில் மிகுதிக்கேற்பவே அக்காலத்தொழுக்கமான பாலையினும் வருத்தம் மிகுதியாயிற்றெனவும், முதுவேனிலின் வெயில் குறைவுக் கேற்பவே அக்காலத்தொழுக்கமான நெய்தலினும் வருத்தங் குறைந்து இரக்கமாயிற்றெனவும் அறிந்து கொள்க. இனி இவையெல்லாம் ஒக்கும்; ஆசிரியர் தொல்காப்பியனார், நுமது கருத்துப்படி மருதத்துக் குரியவெனப்படும் முன்பனிப்பெரும் பொழுதையும் பின்பனிப் பெரும்பொழுதையும் அம்மருதத்துக்கே உரியவாக உரையாமல் அவற்றுள் முன்னதைக் கூதிர்ப்பொழுதொடு சேர்த்துக் குறிஞ்சிக்கும், பின்னதை இளவேனிற் பருவத்தொடு சேர்த்துப் பாலைக்கும் உரியவாக நூற்பா யாத்தமைக்கு

வழிவிடுமோ றியாங்ஙனமோ வெனிற், கூறுதும். முன்பனிப்பருவம் குறிஞ்சிக்கே உரியதாயின் ஆசிரியர் அதனைக் குறிஞ்சிக்குக் கூறிய நூற்பாவிலேயே சேர்த்துக் கூறி யிருப்பர்: அங்ஙனமே பின்பனிப் பருவ மென்பதும் பாலைக்கே உரியதாயின், அவரதனைப் பாலைக் குரைத்த நூற்பாவிலேயே சேர்த்துரைத்திருப்பர். ஆனால் அவ் விரண்டு பருவங்களும் அங்ஙனங் குறிஞ்சிக்கும் பாலைக்குமே சிறப்பினுரியவாகாமல் மருதமென்னும் வேறொன்றனுக்கே சிறப் பினுரியவாதலின், அவற்றைக் குறிஞ்சிபாலை நூற்பாக்களிலேயே சேர்த்துரையாமற் பிரித்து வேறு நிறுத்தினர். ஆனாற் கூதிர்க் காலத்தை யொட்டிவரும் முன்பனிப்பருவம் அக்கூதிரியல்பு சிறிது கலந்தும், இளவேனிற் காலத்தை யொட்டி முன் வந்த பின் பனிப் பருவம் அவ்விளவேனிலியல்பு சிறிது கலந்தும் இயல்வனவாதலின், அக்கூதிரொழுக்கமும் இளவேனி லொழுக்கமுமான குறிஞ்சி பாலைகள் நிகழ்தற்கு முறையே முன்பனி பின்பனிப்பருவங்களையும் உரியவாகக் கூறுப வென்றார் ஆசிரியர். அங்ஙனம் கூறுமிடத்தும்

'பனியெதிர் பருவமும் உரித்தென மொழிப'*
'பின்பனி தானும் உரித்தென மொழிப'†

என்றவற்றிற்கு இழிவுசிறப்பும்மை கொடுத்தே விழிப்பாய் நூற்பா ஓதினர். உம்மையை இழிவுசிறப்போ டெச்சமென்றலும் பொ ருந்தும். ஆகவே ஆசிரியர் இவ்வாறோதினமையால் யாங்கொண்ட கோட்பாட்டிற்கு உறும் இழுக்குச் சிறிது மில்லையென் றறிந்து கொள்க. எனவே இதுகாறுங் கூறியவாற்றால், முல்லை முதலிய ஒழுக்கங்களுக் குரியவான பொழுதுகளைப் பற்றிய தொல்காப் பியனார் கருத்து,

திணை	பெரும்பொழுது	சிறுபொழுது
முல்லை	கார்	மாலை
குறிஞ்சி	கூதிர்	யாமம்
மருதம்	முன்பனி } பின்பனி }	வைகுறு } விடியல் }
பாலை	இளவேனில்	நண்பகல்
நெய்தல்	முதுவேனில்	எற்பாடு

* தொல், அகத், எ † தொல், அகத், ௰

என்றிதுவேயாகு மென்பது சிறிதுமே ஐயத்துக் கிடனின்றி நன்கு தெளியப்படுமென்க. இவ்வாற்றால் ஈண்டைக்கு வேண்டியபடி அகப்பொருள் நெய்தலுக்கும் அதற்கினமான புறப்பொருள் தும்பைக்கும் உரிய பெரும் பொழுதுகள் முறையே முதுவேனிலும் எற்பாடுமாமென் றறிந்துகொள்க. போர்மேற் சென்ற தன் தலைவன் கார்காலத் தொடக்கத்திற் போர்முடித்துத் திரும்புவனென்று தலைவி எதிர்பார்த்திருப்பளென எல்லா விலக்கண விலக்கியங் களும் முல்லை யொழுக்கத்தில் முடித்துக் கூறலின், பகைமேற் சென்ற தலைவனுக்குப் போர் நிகழுங் காலம் அக் கார்ப்பருவத்துக்கு முன் பருவமான முதுவேனிற் பருவமே யாகுமென்பது இனிது பெறப்படுதலும், அகப்பொருண் முல்லைக்கும் புறப்பொருள் தும்பைக்கும் உரிய பெரும்பொழுது முதுவேனி லென்பதே **ஆசிரியர் தொல்காப்பியனார்** கருத்தென்று யாம் மேல் விளக்கிக் காட்டிய உரைக் கூற்றோடு முழுதொத்திருத்தல் கண்டு மாணக்கர் பெரிதும் நினைவு கூர்ந்து கருத்தமையற்பாலாரென்க.

புறப்பொருளரசன் பகைமேற் சென்ற இரவெல்லாம் பாடி வீட்டிலிருந்து மறுநாட் பகலிற் போர் தொடங்கிப் பிற்பகலிற் பொருது முடிப்பானாகலின், முதுவேனிலின் எற்பாடு தும்பைத் திணைக்குரித்தாயிற்று. இங்ஙனமே, அலையிடைவெளியும் பொழி லிடைமணமுமான நெய்தனிலப் பயனெல்லாம் எழுகின்ற நேரம் எற்பாட்டு நேரமேயாகலின் அவற்றை அகப்பொருட்டலைவியும் அஞ்ஞான்று நுகர்ந்து காண்பாள். இனிப் போரொழுக்கத்துக் குரிய தும்பைப்பூ ஏனைய நிலங்களாற் பெறப்படாமையின், அது நெய்தனிலத்துப் பூவென்றே முடிக்கப்படும். 'வருணன் மேய பெருமண லுலகமும்'* என்று ஆசிரியர் கூறுமாறு போல நெய்தலைச் சார்ந்த மணற்றிட்டுகளிலேயே இத்தும்பைப் பூக்கள் பூத்தலும் நிகழ்ச்சியிற் றெளிந்து கொள்க. இனி அறியற் பாலது நெய்தலின் உரிப்பொருளான இரங்கலாம். தலைவனுந் தலைவியும் ஒருவரை யொருவர் பிரிந்தக்கால் நெய்தல் நிலத்தின் கடற் காற்றுங் கானற்காற்றும் ஊறி மாலைப் பயனும் பொழிற்பயனும்

* தொல், அகத், ௫

நுகர்ந்து அவ்வாற்றுற் றம் துணையை நினைந்து பிரிவாற்றுமல் இரங்குவர். போர் நிகழ்ச்சியினும் இந்நேரத்தில் ஆண்டுள்ளார்க்கு இரக்கவுணர்ச்சி தோன்று நிற்கும். தன் வேந்தனுக்காகத் தன் னலங்களெவற்றையும் பொருட்படுத்தாமற் போர்முனை யணுகி வீரமாய்ப் பொருது புண்பட்டு வீழும் மறவர்களைப் பற்றி மாற்று ரும் மற்றையோரும் இரங்காமலிரார். இவ்வுண்மையை ஆசிரியர் 'வாளோராடு மமலை' யென்று துறை வகுத்தார். பகையினுல் வீர முனைப்பும் அவர் வீழ்ச்சியினுல் இரக்க முனைப்பும் ஆக இருவகை யுணர்ச்சிகளே போர்க்கள மணுகினுர்க்கு நிகழும்; அவற்றுள் வீரர்க்கு வீர முனைப்பென்பது பொது; ஆகவே போர் நிகழ்ச்சி யில் அவர்க்குச் சிறப்பாயெழும் புத்துணர்ச்சி இரக்கமேயாதலின் அஃதேயீண்டுப்போர்நிகழ்ச்சியின் முடிந்த பயனுகக்கொள்ளப்படும்; துன்பத்தின் பயன் இன்பமாதல் போலவென்க. தன் வெற்றியினுற் பகைவர் நாடு அழிதற்கிரங்கித் தோற்றவனை விளங்கப் பாடுதலான 'கொற்றவள்ளை' யென்னுந் துறை வஞ்சித்திணைக்கண் வந்தமையும் போர் நிகழ்ச்சியில் இரக்கவுணர்ச்சி யுண்டாகு முண்மைக்குப் பெருஞ்சான்றும். மேலும், போர்க்களத்தில் இறந்துபட்ட போர் வீரரின் பெண்டிர் ஆண்டெய்தித் தங் கணவன்மார் விழுப்புண் பட்டு வீழ்ந்து கிடத்தல் கண்டு அவராகந் தழுவிக் கண்ணீர் விட்டு இரங்குபவாகலான், போர் நிகழ்ச்சியின் பயன் எல்லா வகை யாலும் இரக்கவுணர்ச்சியாகவே முடிகின்றது. மாதரிரங்கு நிலையைக் குறித்தற்கே ஐயனுரிதனுர் 'சிருங்கார நிலை' யென் றும், 'உவகைக் கலுழ்ச்சி' யென்றுந் தமது வெண்பா மாலையில் இரண்டு துறைகள் வகுத்துள்ளார். 'உவகைக் கலுழ்ச்சி'யில் வரும்

'வெந்தொழிற் கூற்றமு நாணின்று வெங்களத்து
வந்த மறவர்கை வாடுமிப்பப்—பைந்தொடி
யாரிடமா வன்னுன் கிடப்ப வகத்துவகை
யோரிடக்க ணீர்பா யுக.'*

என்னும் வெண்பாவினைக் காண்க. ஆசிரியர் நச்சினுர்க்கினியரும் இரக்கமுந் தலைமகட்கே பெரும்பான்மையும் உளதாயவாறுபோலக்

* புறப் - வெண், தும், உஅ,

கணவனை யிழந்தார்க்கன்றி வீரர்க்கு இரக்கமின்மையானும், அவ் வீரக்குறிப்பின் அருள்பற்றி ஒருவர் ஒருவரை நோக்கிப் போரின் கண் இரங்குபவாகலானும், ஒருவரும் ஒழியாமற் பட்டுழிக் கண் டோர் இரங்குபவாகலானும் பிறகாரணங்களானும் நெய்தற்குத் தும்பை புறனாயிற்று'* என்று இவ்வுண்மைகளை யெல்லாம் நுணுக் கமாய் எடுத்துக்காட்டினமை கண்டுகொள்க. இவ்வாற்ருல் இத் தும்பைக்கும் நெய்தற்கு முள்ள ஒற்றுமை நுணுக்கம் அறியப் படும்; இனி இத் தும்பைப் புறப்பொருள் நெய்தலகப்பொருளாய் நுணுகிப் பொருந்துமாறு ஆராயற்பாலது.

கடலும் கடல் சார்ந்த இடமுமான நெய்தல் நிலத்தில் மண் முதலான ஐம்முதற் பொருள்களினுங்காற்றே விளங்கித் தோன்றும். ஏனையெல்லா நிலங்களினும் மணல் பரந்து நீரூறும் நெய்தனிலத் தின் மட்டுமே இடம் நிறைந்த சோலைகளுஞ் சோலை நிறைந்த மலர் களும் மிக்கு விளங்குதலாலுங் கடலலைகள் எப்போதும் எறிந்து கொண்டேயிருத்தலாலுங் காற்றுக்குப் பிறப்பிடங் கடல்நிலமே யிற்று. மேலுங் கடலே பெரும் பரப்புடையதாகலின், ஆண்டெழுங் காற்றே மிகுந்து தோன்றும்; அங்ஙனந் தோன்றுங் கடற்காற்றே ஏனை நிலங்களினும் ஊடுவிராய் அவ்வந் நிலக்காற்ருய் மாறு மென்றறிக. பண்டைத் தமிழ்நூல்க ளெல்லாமுங் காற்றினி மையைக் கடல் சார் நிலத்திற்கே மிகுத்துக் கூறினமையும் நினைவு கூர்க.

இனி இக்காற்றிற் குரிய தன்மை ஊக்கமெனப்படும். காற்று எப்பொழுதும் ஊசலாடிக்கொண்டிருத்தலே இதற்கு ஒருபெருஞ் சான்று. மாணிக்கவாசகப் பெருமானும் "மேதகு காலின் ஊக் கங் கண்டாய்"† என்று காற்றுக்கு ஊக்கத்தையே யேற்றிக் கூறு வாராயினர். ஊக்கமென்பது ஒரு கருத்தில் முனைப்புடைமை யாகும். போர் நிகழ்ச்சியிற் பெரிதும் பயன்பட்டது இவ் வூக்கமேயா மன்றே? தலைவன் றலைவியருந் தத்தந் துணைவரைப் பிரிந்த பிரிவில் ஒரே முனைப்புடையராயிருந்து இரங்கினுரல்லரோ? ஆகவே ஊக்கமென்பது நெய்தலகப்புறப் பொருள்களில் முனைந்து நிகழ்தல் இனிது பெறப்படும்.

---

* புறத், கச. † திருவாசகம், திருவண்டப், உச.

காற்றின் ஊக்கத்தை மலர் மணங்களால் முகர்ந்தறிவது மூக்குப் பொறியாகுமென்பது தெளிவாகலின், போர் நிகழ்ச்சியிலும் வீரர்க்கு ஊக்கமாய்ப் புலால் முகர்ந்தது மூக்கு.; நெய்தல் நிகழ்ச்சியிலுங் கடற்காற்றினை மலர் மணமாக முனைப்பாய் முகர்ந்துணர்ந்தது மூக்கு என்பதூஉம் அறிந்துகொள்க. இவ்வாற்றால் இருதிறத்தாரும் முகர்ந்துணர்ந்தது நாற்றமாகுமென்பது வெளிப்படை.

இனிப் போர்க்களத்துப் பட்ட வீரர் வீழ்ச்சியால் இரங்கும் ஏனையோர்க்கு முடிவில் அவர்பாலுண்டாவது உண்மைக் காதலெண்ணமாகும். மிகக் கொடுமையான வீரக்குறிப்பினுழல்வார்க்கு முடிவில் விளைவது காதலாகும்; போர் முடிந்ததுந் தலைவன் தன் தலைவியின்பாற் காதல்கொண்டு இல்லந் திரும்புமுண்மையும் இதனை வற்புறுத்தாநிற்கும். திருவள்ளுவனாரும்,

'முயங்கிய கைகளை யூக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல்'*

என்பதுபோன்ற திருக்குறள்களைத் தெளித்தருளுவாராயினர். இங்ஙனமே தலைவிக்கும் நெய்தனிலப்பயனை எற்பாட்டில் நுகர்ந்து இரக்கம் எய்த எய்தத் தன் றலைவன்பால் முறுகிய காதலுணர்ச்சி பெருகி யெழுதல் கண்டுகொள்க. இங்குக் காட்டியவற்றுள் ஊக்கமென்பதே தும்பையொழுக்கமெனவும், காதலென்பதே நெய்தலுணர்ச்சி யெனவுங் கருத்திருத்தல் வேண்டும்.

எனவே காற்றின் பொருட்பயிற்சி ஊக்கமென்னுந் தும்பையுணர்ச்சியாய் நுணுகி முகருஞ்செயலாற் காதலென்னும் நெய்தலுணர்ச்சியாய்ப் பின்னும் நுணுகி அகப்பொருளாகி மெய்க்காதலர்க்கு இன்பம் விளைத்தல் உணரப்படுமென்பது.

---

* திருக்குறள், கஉ௯: அ

தீக்கை

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A.]

தீக்ஷை என்னும் வடமொழிச் சொல்லானது தமிழில் தீக்கை எனத் திரிந்தது. மலத்தைக் கழுவி அறிவைக் கொடுத்தல் என்பது அதன் பொருள். ஆசிரியன், சீடனிடத்துச் சிவத்தன்மையை வெளிப்படவொட்டாது தடையாக மறைத்து நிற்கும் மல வலியைக் கெடுத்துச் சிவத்தன்மையை வெளிப்படச் செய்தலாகிய கிரியையே தீக்கையாகும். மாந்திரிகன் ஒருவன் கருடபாவனை செய்ததனாலுண்டான தன் மந்திரவலியால் பாம்பு கடித்த விடத்தைப் போக்குதல்போல ஆசிரியன் சிவோகம்பாவனை செய்ததனாலுண்டான தனது அருள் வலியால் சீடனிடத்துள்ள மலத்தைப் போக்குகின்றான். ஒருவன் சைவ குலத்திற் பிறந்தாலும் அவன் தீக்கை பெற்றாலன்றிச் சைவன் ஆகமாட்டான்.

2. சைவ சமயத்தில் அன்றிப் பிற சமயங்களில் ஆணவமலத்தின் உண்மை கூறப்படவில்லை. ஒருவன் மலத்தினாலுண்டான அறியாமையினின்று நீங்கி உண்மை அறிவை அடையத் தீக்கைமுறை சைவ சமயத்திற் கூறப்படுதல் போலப் பிற சமயங்களிற் கூறப்படவில்லை. தீக்கையானது உண்மை அறிவுப் பேறு அடைய மேலான உறுப்பாயிருக்கின்றது.

3. சைவத் தீக்கையானது தகுதியுடையவர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்பச் செய்யப்படுதலன்றிப் பார்ப்பன மக்கள் செய்யும் உபகரணச் சடங்கு போலச் சாதி பற்றிச் செய்யப்படுதலின்று. பஞ்சம குலத்திற் பிறந்த ஒருவனும் தகுதியுடையவனாயிருந்தால் மேலான நிருவாண தீக்கை பெற்றுக்கொள்ளலாம். பெத்தான் சாம்பன் என்னும் பஞ்சமப் பெரியார் சிதம்பர தீக்ஷிதர்களில் ஒருவராகிய உமாபதி சிவாசாரிய சுவாமிகளால் இறைவனது ஆணையின்படி தீக்கை செய்யப் பெற்றதே இதற்கு எடுத்துக் காட்டாகும்.

4. உயிர்கள் பல வகைப்பட்ட தகுதிகளை உடையவர்கள் ஆதலின் அத் தகுதிகளுக்கேற்ப ஆசிரியனாற் செய்யப்படும் தீக்கையும் பல வகைப்படும். விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னும் மூத்தி உயிர்களில் ஆணவமலம் ஒன்றே யுடைய விஞ்ஞானகலருக்கும் ஆவணம் கன்மம் ஆகிய இருமலமுடைய பிரளயாகலருக்கும் செய்யப்படும் தீக்கை நிராதார தீக்கை எனப்படும். இந்த நிரதிகார தீக்கையைச் சிவபெருமானே விஞ்ஞானகலர் பிரளயாகலர்களுக்கு ஆசிரியர் அதிட்டானமின்றி முறையே உண்ணின்றும் முன்னின்றும் நேரே செய்கின்றான்.

5. ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களுமுடைய சகலர்களுக்கு இருவினையொப்பு அடைதலாகிய தகுதி வந்த காலத்தில் சிவபெருமான் ஒரு ஆசிரியனை அதிட்டித்து நின்று மந்ததரம், மந்தம், தீவிரம் தீவிரதரம் என்னும் சத்திநிபாதம் முறையில் வைத்துச் செய்யும் தீக்கை சாதார தீக்கை எனப்படும். சகலருடைய மல பரிபாகமும் பலவகைப்படுதலின் அவர்களுடைய தகுதிக்கேற்ப அவர்கள் மலத்தையொழிக்கும்படி செய்யப்படும் சாதார தீக்கையும் பலவகைப்படும். அத் தீக்கைகள் ௧. நயன தீக்கை ௨. பரிச தீக்கை; ௩. வாசக தீக்கை, ௪. மானச தீக்கை, ௫. சாத்திர தீக்கை, ௬. யோக தீக்கை, ௭. ஔத்திரி தீக்கை என ஏழு.

6. நயன தீக்கையாவது மாந்திரிகன் பாம்பினாற் கடியுண்டவனைக் கருடபாவனையினாலே பார்த்துப் பாம்பின் விடம் தீர்த்தல்போல ஆசிரியன் சீடனைச் சிவபாவனையினாலே பார்த்து மல நீக்கம் செய்தலாகும்.

7. பரிச தீக்கையாவது ஆசிரியன் தன்னுடைய கையில் மந்திரத்தினால் சிவசக்தி நிறையும்படி செய்து அக்கையைச் சீடனுடைய தலையில் வைத்துச் சிவசக்தியை அவனிடம் இறங்கும்படி செய்து அதனால் அவனிடத்துள்ள மலவலியை நீக்கஞ் செய்தலாகும்.

8. வாசக தீக்கையாவது ஆசிரியன் சீடனுக்கு அவனுடைய மலம் நீங்கும்படி பதினொரு மந்திரங்களுடன் அஞ்செழுத்தையும் அவற்றின் பொருளையும் அவற்றை ஓதும் முறைமையையும் உணர்த்துதலாகும்.

9. மானச தீக்கையாவது ஆசிரியன் தனது ரேசகவாயுவினால் வெளியே வந்து சீடனுடைய பூரகவாயுவுடன் அவனுடைய இருதயத்திற் புகுந்து சீடசைதன்னியத்தை வாங்கித் துவாத சாந்தம் வரை பிராசாத மந்திர உச்சாரண சகிதம் கொண்டு போய்ப் பின்பு தனது இருதயத்தில் சிவ சைதன்னியத்துடன் கலந்ததாகப் பாவித்து அச்சீட சைதன்னியத்தைச் சீடனுடைய உடலிற் பிரதிட்டை செய்தலாகும்.

10. சாத்திர தீக்கையாவது ஆசிரியன் சீடனுக்கு ஆகமங்களிற் கூறிய பதி பசு பாச இலக்கணங்களை உணர்த்தி அவன் அறியும்படி செய்தலாகும்.

11. யோக தீக்கையாவது ஆசிரியன் தனது யோகத்தால் சீடனுடைய இருதயத்தில் பிரவேசித்து அவனுடைய சீவனை மலம் நீங்கும்படி பார்த்துச் சிவனிடத்திலே யோசித்தல் ஆகும்.

12 ஔத்திரி தீக்கையாவது ஹோதம் அதாவது ஓமக் கிரியைகளுடன் செய்யப்படுவது.

13. நயன தீக்கை பரிச தீக்கை வாசக தீக்கை மானத தீக்கை சாத்திர தீக்கை யோக தீக்கை ஆகிய ஆறு தீக்கைகளும் ஔத்திரி தீக்கைக்கு உரியரல்லாதார்க்குத் தனித்தனியே செய்யப்படுவனவும் ஔத்திரி தீக்கைக்கு உரியராவார்களுக்கு ஒருங்கே ஔத்திரி தீக்கைக்கு உறுப்புக்களாகச் செய்யப்படுவனவும் ஆகும்.

14. இந்த ஔத்திரி தீக்கையும் ஞானவதி கிரியாவதி என இருவகைப்படும்.

15. ஞானவதியாவது குண்டம், மண்டலம், அங்கி, நெய், சுருக்கு, சருவம் முதலியன வெல்லாம் ஆசிரியன் மனதால் கற்

பித்துக்கொண்டு விதிப்படி அகத்தே மூலாதாரத்தே இடைநாடி சுழுமுனை நாடிகளாய சுருக்கு சருவங்களால் நெற்றியில் பிராணாயாமத்தாலுண்டாகிய அமுதமாகிய நெய்யைப் பெய்து குண்டலி சத்தியை எழுப்பி ஆகுதி முதலிய கிரியை செய்வது.

16. கிரியாவதியாவது குண்ட மண்டலம் அங்கி நெய் சுருக்கு சருவ முதலியன வெல்லாம் புறத்தே அமைத்துக் குண்ட மண்டலத்தில் விதிப்படி வளர்த்த நெருப்பில் சுருக்குச் சருவங்களால் நெய்யைப் பெய்து ஆகுதி முதலிய கிரியை செய்வது.

17. ஞானவதி கிரியாவதி ஒவ்வொன்றும் நிர்ப்பீச தீக்கை சபீச தீக்கை என இருவகைப்படும். ஆகவே ஔத்திரி தீக்கையானது ஞானவதி நிர்ப்பீசம், ஞானவதி சபீசம், கிரியாவதி நிர்ப்பீசம், கிரியாவதி சபீசம் என விரியால் நான்கு வகைப்படும்.

18. நிர்ப்பீச தீக்கையாவது தீக்கைக்குப் பின் வழுவின்றிச் செய்யக் கடவனவாகிய சமய ஒழுக்கங்களைப் பயிலும் ஆற்றலில்லாத இளைஞர் முதியோர் அறிவு குறைந்தவர் பெண்கள் நோயுடையார், பலபோக முடையார் முதலியோருக்கு ஆசிரியன் பீஜமந்திரங்களைச் சேராமல் பதினொரு மந்திரங்களையும் அஞ்செழுத்தையும் ஓதும்படி உணர்த்தி ஓமக்கிரியைகளுடன் செய்யும் தீக்கையாகும். இத் தீக்கைப்பே றுடையார்களுக்குச் சமயம் விசேடம் நிருவாணம் என்னும் மூன்று தீக்கைகளும் செய்யப்படும். பிறருக்கு நித்தியம் நைமித்திகம் காமிகம் என்னும் கிரியைகளைச் செய்யும் அதிகாரம் கொடுத்தலாகிய ஆசாரியபிடேகம் இவர்களுக்குச் செய்யப்படமாட்டாது. ஆதலின் இது நிரதிகார தீக்கை யெனவும் பெயர் பெறும்.

19. சபீச தீக்கையாவது மல பரிபாக மாதலுடன் கற்றறிந்து சமய ஒழுக்க வழியில் வழுவாது நிற்கும் ஆற்றலுடைய உத்தமர்களுக்கு ஆசிரியன் பதினொரு மந்திரங்களையும் அஞ்

செழுத்தையும் பீஜமந்திரங்களுடன் உச்சரிக்கும்படி உணர்த்தி ஓமக் கிரியைகளுடன் செய்வது. இந்தச் சபீச தீக்கையில் சமயம் விசேடம் நிருவாணம் ஆசாரியபிடேகம் என்னும் நான்கு வகைத் தீக்கைகளுஞ் செய்யப்படும். ஆசாரியபிடேகம் செய்யப்படுதல் பற்றி இது சாதிகார தீக்கை எனவும் பெயர்பெறும். இத் தீக்கைப் பேறுடையார் தீக்கை வேறுபாட்டால் சாதகர் ஆசிரியர் என இருதிறப்படுவர்.

20. இந்தச் சபீச தீக்கையும் உலோக தருமிணி, சிவதருமிணி என இருவகைப்படும்.

21. உலோக தருமிணியாவது இல்லறத்தில் ஒழுகுகிறவர்களுக்கு திரோதான சத்திரூப சிகாச் சேதமின்றிச் செய்யப்படுவது. இது பௌதிக தீக்கை எனவும் பெயர் பெறும்.

22. சிவதருமிணியாவது துறவிகளுக்குத் திரோதான சத்திரூப சிகாச் சேதம் செய்து செய்யப்படுவது. இது நைட்டிக தீக்கை எனவும் பெயர் பெறும்.

(இன்னும் வரும்)

தாயுமான சுவாமிகள்

இப்பெரியார், சுமார் 200 ஆண்டுகட்கு முன் இருந்தவர்: வேளாண் மரபினர்; சோழநாட்டில் பிறந்தவர். இவர் தந்தையார் கேடிலியப்பப்பிள்ளை யென்பார். இவர் குடும்பம் அந்நாளில் தமிழ் நாட்டிலே பிரசித்திபெற்ற பெரும் குடும்பங்களில் ஒன்றாக இருந்தது.

தாயுமானவர் தந்தையார், திருமலை நாயகரது பவுத்திரரான விஜயரங்க சொக்கநாத நாயகரிடம் ஓர் பெரிய உத்தியோ

கம் பெற்றிருந்தனராம். கேடிலியப்பப்பிள்ளை வேதாரணியத்தைச் சார்ந்தவராயினும் திரிசிரபுரத்தில் உத்தியோகம் பார்த்து வந்தனர். திரிசிர மலையிலுள்ள தாயுமானவர் என்னும் சுவாமியின் பெயரையே தமது குழந்தைக்கும் இட்டனர்.

தாயுமானவர் வடமொழியிலும் தென்மொழியிலும் நிரம்பிய புலமை வாய்ந்து திகழ்ந்தனர். பதினெட்டாவது நூற்றாண்டிலும் கூட, பார்ப்பனரல்லாதார் நந் தமிழ்நாட்டில் வடமொழிப்பயிற்சி பெறுதற்கு விசேட இடையூறு இருந்ததில்லையென்பது தெளிவாகும். தாயுமானவர் வடமொழியிலுள்ள இலக்கண இலக்கியங்களை மட்டுங் கற்றவரல்லர்; வேதாகமங்களையும் ஓதியுணர்ந்தவரென்பதற்கு அவர் பாடல்களில் தக்க அகச்சான்று கிடைக்கின்றது.

வடமொழியோடு தாய்மொழியிலும் அவர் உயர்ந்த பயிற்சி பெற்றிருந்தார். தேவார திருவாசகம் ஆகிய திருமுறைகளும், சித்தாந்த சாத்திரங்களும் தாயுமானவர் உள்ளத்தையும் வாழ்க்கையையும் வசமாக்கி மலரச்செய்தன. திருப்புகழும் இவர் பெரிதும் விரும்பி ஓதிய நூல்களில் ஒன்றாகும். வடமொழி தென்மொழி எனும் இருமொழிகளிலும் இவர் பெரும்புலமை பெற்றிருந்ததோடு விவகாரஞ் செய்யுந் திறமையும் இவர்பால் விசேஷித்துக் காணப்பட்டது. அக்காலத்தில் நடைபெற்ற சமய வாதங்களால் மாசடையாது அவர் உள்ளம் சமரச நிலைபெற்று வளர்ந்தோங்கியதற்குக் காரணமென்ன?

தகப்பனரது உத்தியோகத்தைத் தாயுமானவரும் வகித்து வந்தனரென்றும், அப்பொழுது அடைந்த பலவகை உலக அனுபவங்களால் அவர் அறிவு வளர்ச்சி பெற்றபோதிலும் உள்ளம் சாந்திபெற வில்லையென்றும், அவர் ஓர் ஞானாசிரியனை நாடிக் கண்டுகொண்டனரென்றும் கர்ண பரம்பரை வரலாறுகள் கூறுகின்றன: திருமூலர் மரபில் தோன்றிய மௌன குரு என்னும் பெரியார்பால் அவர் உபதேசம் பெற்றனர் என்பதற்கு அவர் பாடல்களே சான்று தருகின்றன.

குருமூர்த்திபால் உபதேசம் பெற்றுக்கொண்டபின் அவர் கட்டளையால் தாயுமானவர் மணஞ்செய்துகொண்டு இல்லறம் நடாத்திவந்தார். தாயுமானவர், மனைவி இறந்தபின் துறவு பூண்டு யோக சாதனங்களில் பயிற்சிபெற்ருர் என்பர். இப் பெரியார் 1742-ல் இராமநாதபுரத்திற்கருகே மகா சமாதியில் அமர்ந்தன ரென்பர்.

இவரது உள்ள நிகழ்ச்சிகளும் பக்தியனுபவமும் இவர் பாடல்களில் பிரதிபலிக்கின்றன. இவரது மாணவர் அருளையர் ஆதியோர் அருள்வாக்கிய அகவல் எனும் அகவலில் தாயுமான வரைக் குறித்துச் சில அருமையான கருத்துக்களை வெளியிட் டுள்ளார்.

''ஆணவம் அருவிடின் அருளுரு தென்னக்
காணரு நேர்மையால் காணவே உரைத்தோன்

....

இல்லறத் திருந்தும் இதயம் அடக்கிய
வல்லவன் தானே மகாயோகி என்றேன்
துறவறத் திருந்தும் சூழ்மனக் குரங்குஒன்று
அறவகை அறியான் அஞ்ஞானி யென்றேன்''

என்னும் பொன்மொழிகள் தாயுமானவரது ஞான உள்ளத்தை உள்ளவாறு வெளியிடுகின்றன. ''இல்லறத்திருந்தும் இதயம் அடக்கிய வல்லவன்தானே மகாயோகி'' என்னும் உண்மை, தற்காலத்திற்கு இன்றியமையாததோர் உண்மையாகு மன்றே?

''தான்பெரும் பேறு சகமெலாம் பேறவே
வான்பெருங் கருணை வழங்கிய மாரி''

என்னும் அருளையர் கூற்று, தாயுமானவரது தாய்மையுள்ளத்தை நன்கு வெளியிடுகின்றது.

''பொறுமை தெளிவு புனிதஆ சாரம்
மறுவிலா வண்மை வார மியற்கை
தண்ணமர் சாந்தத் தயங்கிய கீர்த்தி

எண்ணெண் கலைபயில் இணையிலாக் கல்வி
நல்ல இரக்கம் நடுநிலை சத்தியம்
இல்லையென் னாமல் எவர்க்கும் தருங்கொடை
நற்குண னெல்லாம் நண்ணிய பெருந்தகை"

என்று தாயுமானவர் தமது அன்பிற்சிறந்த சீடரால் போற்றப்படுகின்றார். 'இணையிலாக் கல்வி' யறிவு வாய்ந்த தாயுமானவர் குணப்பெருங் குன்றமாகக் காட்சியளிக்கின்றார்.

தாயுமானர் சைவசித்தாந்தத்தில் விசேடமான காதல் கொண்டவர், எனினும் அவர் ஓர் சமரசவாதி யென்பது அவரது அருமைச் சீடரான அருளையராலும் ஒப்புக்கொள்ளப் படுகின்றது.

"பகர்சம யந்தொறும் பரமே யிருந்து
சுகநடம் புரியுந் தொழிலெனச் சொன்னேன்"

என்னும் அகவலடிகளைக் காண்க.

தேவாரத்தின் சொல்லும் பொருளும் தாயுமானவரால் பொன்னேபோல் போற்றப்படுகின்றன. அவ்வண்ணமே திருவாசகத்திலும் திருப்புகழிலும் அவர் ஈடுபட்டுள்ளாரென்பது வெள்ளிடைமலை. எனினும் தாயுமானவர் சமரச உணர்வு கொண்டவரென்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

பற்பல சமய நெறிகளும் தந்தெய்வம் எந்தெய்வம் என்று பரம்பொருளைப் பங்கிட்டுக் கொள்ள முயல்கின்றன. ஆனால் பரம்பொருள் சமயமுமாய் அல்லவுமாகி விளங்குகின்றதென்று தாயுமானவர் கூறுகின்றார். இவர் சமரசவாதி யெனினும் சைவமே இராஜாங்க மதமென்று கருதுகின்றார். இவர் பாடல்களுக்கு ஓர் முன்னுரையாக அமைந்துள்ள **திருவருள் விலாசப் பரசிவ வணக்கம்** என்பது இவர் கொள்கையின் சாராம்சத்தை நன்கு வெளியிடுகின்றது.

இம்முன்னுரையில் அடங்கிய மூன்று செய்யுளையும் ஆராய்வோர் தாயுமானவர் உள்ளத்தின் திறவுகோலை ஒருவாறு கண்டு

கொள்வர். காய்தல் உவத்தல் அகற்றி ஆராய்வோர் தாயுமானவரை ஓர் உண்மையான சைவ சமயியென்று ஒப்புக் கொள்வரெனினும் அவரது சமரச உணர்வினையும் மறுக்கத் துணியாரென்பது எமது கருத்து.

"பார்க்குமிட மெங்கணும் நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தமே" தாயுமானவரது பரசிவமாகும். "அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது" கடவுள், உயிர்க்குயிராய்த் தழைத்தது கடவுள். இவ்வாறு கூறும் தாயுமானவர் சைவசமயத்திற்கும் பிற சமயத்திற்கும் பாலமாக அமைகின்ருர். இவர் ஏகான்மவாதி அல்லர். எனினும் வேதாந்த சித்தாந்த சமரச நிலைகண்ட பெரியார். கவிச் சுவையில் இராமலிங்கர் தாயுமானவரை வென்றுவிடுகின்ருர்: சமரச வுணர்விலும் தாயுமானவர்க்குக் குறைந்தவரல்லர். எனினும் தாயுமானவர் இராமலிங்க சுவாமிக்குச் சமரச மார்க்கத்தில் ஓர் வழி காட்டியாக அமைந்திருத்தல் வேண்டும்.

"ஒன்றதே பேரூர் வழியதற் காறுள
தென்றதே போலும் இருமுச் சமயங்கள்
நன்றிது தீதிது என்றுரை மாந்தர்கள்
குன்று குரைத்தெழு நாயையொத் தாரே."

என்றவாறு ஆறு சமயங்களும் பேரூர்க்கு வகுத்த பல வழிகளாகக் கொள்ளத்தக்கன. யானைகண்ட குருடர் நிலையே பலவேறு சமய வாதிகளின் நிலையாகும். இந்நிலையில் சமரச சன்மார்க்கம் ஒன்று உண்டென்றும் அதன் பல்வேறு படிகளே பல சமயங்களாகுமென்றும் திருமூலர் என்னும் சிவராஜயோகி கருதுவாராயினர். சைவ சமயத்தை இராஜாங்க சமயமான சமரச மதமாக்க வேண்டுமென்று முயன்ற பெரியாராகிய திருமூலரைத் தாயுமானவர் பின்பற்றிச் செல்கின்ருர். ஆனல் பல்வேறு காரணங்களால் சைவ சமயம் வைணவம் போன்ற சமயங்களைத் தன்னுள் அடக்கிக்கொள்ளத் தவறிவிட்டது. எனினும் தாயுமானவரது சமரச முயற்சி இராமலிங்க சுவாமிகள் வாயிலாகஒருவாறு முதிர்ந்து கனிவெய்தியது என்பது திண்ணம்.

"இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி
இயமான னாய்எரியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாய்அட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமும் குற்றமும் பெண்ணு மாணும்
பிறருருவும் தம்முருவும் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே"

என்று தேவாரத்திலும்,

"இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தே
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே!
ஒன்றுநீ யல்லை யன்றிஒன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே"

என்று திருவாசகத்திலும், புகழ்ந்தோதப் பெறும் தனிக் கருணைப் பெருங்கடலான சிவபெருமான் தாயுமான சுவாமிகளின் திருப்பாடல்களில், வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை காட்டும் ஆனந்த ஞானமூர்த்தியாகக் காட்சி தருகின்றார்.

"அறிவை அறிவதுவே
ஆகும் பொருளென்று
உறுதிசொல் உண்மையினை
ஒருநா ளெந்நாளோ?"

என்று தாயுமானவர் அறிஞர் உரைக்கண்ணியில் கூறியுள்ளார். சமரச ஞானமூர்த்தி யாகிய சிவம் சுத்த அறிவாகவிளங்குகின்றது. எனவே அறிவை அறிவதுவே பொருளாகுமென்னும் அருணகிரிநாதர் கொள்கையைத் தாயுமானவரும் வற்புறுத்தியுள்ளார். (ஊழியன்)

திருமுருகாற்றுப்படை விளக்கம்

(இதன் உரிமை யாக்கியோற் குரியது)

[திரு. அ. நடராஜபிள்ளை யவர்கள்]

(நச்சினார்க்கினியர் போக்கின்படி யுரைநடை)

(உகூஎ-ம் பக்கத் தொடர்ச்சி)

(௪) திருவேரகம்

உழுவலன்ப! அவ்வண்ணம் பழநித் திருப்பதியிலோ, குழந்தைவேல் முருகனைப் பார்க்க வியலாவிட்டால், பூணூற் சடங்கிற்கு முன்னொரு பிறப்பும் பின்னொரு பிறப்புமாகிய விருபிறப்பினைக் கொண்ட வந்தணர்கள், நீராட்டத்தின் போது தோய்த்த வீரம்புலரா வுடையினை யுடம்பிலே கிடந்துலரும்படி யுடுத்து, முருகப்பிரானைப் புகழ்ந்து, தலைமேலே சேர்த்த கைகளை யுடையவர்களாய், 'நமோ குமாராய,' என்ற ஆறெழுத்துக்களைத் தன்னிடத்தே கொண்ட வருமைபான மறை மொழிகளை நாப்புடை பெயரு மவ்வளவிலே நவிலப்பாடி, வழிபாடிற்ற வேண்டிய வேளை யறிந்து மணமிகுந்த நல்ல மலர்களைக் கொண்டு முறையே வழிபாடாற்ற, அப்பெருமான் அதனால் மிகுதியும் மகிழ்ந்து திருவேரக மென்கின்ற திருப்பதியிலே யெழுந்தருளித் திகழ்தலுங் கூடும்.

அவ்வந்தணர்கள் அணிந்த பூணூல், மூவிழை கொண்டு முப்புரி யிடுதலின், ஒன்பதிழையினைக் கொண்ட வொரு புரியினை மூன்றாக்கியதா லுண்டான நட்பமானதாம். அவர்கள் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல் ஏற்ற லென்னுமாறு தொழில்களும் பொருந்திய முறையிற் றவறுதவராவர்; பெற்றோராகிய விருவர் குலத்தையும் உலகத்தார் நன்றென்று கொண்டாடிய பல்வேறுபட்ட பழைமையான குடியினையுடையார்; நாற்பத்தெட்டியாண்டாகிய நல்ல விளமைக் காலத்தை மறை கூறிய வழியிலே செலவழித்து, எக்காலும் அறப்பொருள்களையே யெடுத்துப் பேசுங் கோட்பாட்டினைக் கொண்டவர்; நாற்கோணம், முக்

கோணம், வில்வடிவமாகிய ஆகவனீயம், தக்கிணாக்கினியம் காருக பத்தியம் என்னும் மூன்று வகைப்பட்ட முத்தீச் செல்வ முதன்மையர்.

(௫) குன்றுதோராடல்

பெருந்தகாய்! அவ்விதந் திருவேரகத்திற் பெருமான் காட்சி திகழா விட்டால், கொடுமையாகிய தொழிலைக் கொண்ட வலிய வில்லினாலே, கோறற் றொழிலை நடாத்துங் குறவர்கள் நீண்ட மூங்கிற் குழாய்களி லிட்டுப் பண்படுத்திய தேனாற் கிடைத்த கட்டெளிவைத் தமது மலையினிடத்தேயுள்ள சிறிய வூரிலே வதியுஞ் சுற்றத்தாருடன் உண்டு களித்துக் குறிஞ்சிநிலத்திற்குரிய 'தொண் டகம்' என்னுஞ் சிறிய பறையினை முழக்கிக் குரவைக் கூத்தினை மலைகடோறும் ஆடிக்கொண் டிருப்பார்கள். அதனைக் காணும் மெல்லிய தோள்களோடு கூடிய பல பெண்மான்கள் போன்ற, மெய் தீண்டி விளையாடற்குரிய மகளிர், தாமும் அக்குரவைக் கூத்திற்குப் பொருந்த ஆடியசைவார்கள்.

இவற்றைக் கடைக்கணித்த வெம்பெருமான் மகிழ்ந்து சிவந்த மேனியை யுடையவனாகிய நல்ல நாற்றத்தைக் கொண்ட சந்தனம் பூசப் பெற்று நிறம் விளங்கும்படியான மார்பினையுடைய வேலினைக் கையிற் பிடித்த வெறியாடுவோன்பேரிற் றோன்றி யாழி னரம்புகளொலித்தா லொத்த வினிய குரலினைக் கொண்டு, தன்னைப் புகழ்ந்து பாடும் மகளிரொடும், தன்னைச் சேவிக்கும் பெண்களோடுங் குன்றுக டோறுஞ் சென்று தன்னுடைய முழவை யொத்த பெரிய தோள்களினாலே அம் மெய்தீண்டி விளையாடற் குரிய மகளிரைத் தழுவியெடுத்து, அவர்கட்குத் தன் முன்கை கொடுத்து விளையாடுதலுங் கூடும்.

அவ் வேலனாகிய வெறியாடுபவனே பச்சிலைக் கொடி யினாலே அழகிய கட்டுக்களையுடைய புட்டில் போன்ற தக்கோலக் காயினை யிடையிடையே கலந்து நறுநாற்றமுடைய சாதிக்காயினை நடுவேயிட்டுக் காட்டு மல்லிகையுடனே வெண்டாளியையுஞ் சேர்த்துத் தொடுத்த தொடையினை யணிந்திருப்பன். செந்நிறங் கொண்ட ஆடையொன்று அவன் உடம்பிலே போர்த்தப்பட்

டிருக்கும். அவன் காதுகளில், சிவந்த அடிப்பாகத்தையுடைய வசோகமரத்தின் குளிர்ந்த விளந்தளிர்கள் அணியப்பெற் றசைந்துகொண்டிருக்கும். இடையிலே, கச்சையும் காலிலே வீரக்கழலுங் காணப்படும். வெட்சிப் பூவாலாகிய தார் அவன் தலை யிலே சூடப்பட்டிருக்கும். அவன் குழலை யூதிக்கொண்டும், கொம் பினை யொலிப்பித்தும், இன்னுஞ் சிறிய பல்லியங்களை முழக்குவித் துக்கொண்டு மிருப்பன். அவன் பேரில் முருகப்பிரான் றோன்றி யிருப்பதால், அவன் ஆட்டுக் கிடாயை யகப்படுத்தியும், மயிலின் மீதெழுந்தருளியும், குற்றமில்லாத கோழிக் கொடியை யெடுத் துப் பிடித்தும், நெடுக வளர்ந்து மிருப்பன். அவன் தோள் களிலே வளையல்க ளணியப்பட்டிருக்கும். அவன் இடுப்பிலே தரித்த வுடை சிறிய புள்ளிகளை யுடையதாய், நல்ல மணத்தையும், குளிர்ச்சியையும், கட்கினிய தோற்றத்தையுங்கொண்டு, தொங்க விட்டுக் கட்டினமையால், நிலத்தைத் தொட்டுக் கொண்டு மிருக் கும்.

எம்பெருமானைச் சேவிக்கும் பெண்கள், விரல்களால் வலிய மலர்விக்க மலர்ந்த மாறுபட்ட மணத்தினைக் கொண்டனவும், ஆழமாகிய சுனையிடத்திலே பூத்தனவுமாகிய பூக்களாற் கட்டப் பட்ட, வண்டுகள் மொய்க்கின்ற தலைமாலையினையும், இதழிதழாகப் பறித்துக் கட்டின கோதையினையுஞ் சூட்டி யழகுசெய்யப்பெற்ற கூந்தலினை யுடையார். கஞ்சாப் பூவினையும், இலைகளோடு கூடிய மணத்தினைக் கொண்ட மலர்க் கொத்துகளையும், சிவந்த காலினை யுடைய மராமரத்தினது வெண்மையான பூங்கொத்துக்களின் மத் தியில் வைத்து வண்டுகள் தேனருந்தும்படி கட்டிய பெரிய குளிர்ந்த அழகிய தழையாகிய வுடையை, அவர்கள் தமது கோவைக ளணிந்துள்ள அரையிலே யசையும்படி தரித்துள்ளார் கள். மயிலைப் பார்த்தா லொத்த நல்ல சாயலும், அழகிய நடையு மவர்கட் குண்டு.

தென்னிந்திய தமிழ்ச்சங்கம்
திருநெல்வேலி.

1929 ஜூன் 26 புதன்கிழமை மாலை 7-மணிக்குத் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தில் கூடிய தமிழ் மக்கள் பொதுக்கூட்டத்தின்

நடபடிக்கைகள்.

இக்கூட்டத்திற்குத் திருவாளர் கா. சுப்பிரமணியபிள்ளையவர்கள் எம். ஏ. எம். எல். தலைமை பொருந்த வேண்டுமென்று திருவாளர் S. முருகப்பபிள்ளை அவர்கள் எடுத்து மொழிந்தது, யாவராலும் ஒப்புக்கொள்ளப்படவே பிள்ளையவர்களும் தலைமை தாங்கினார்கள்.

முதலில், கடவுள் வாழ்த்துக் கூறப்பட்டது. பின் சங்க அமைச்சர் திருவாளர் பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள் இந்தச்சிறப்புக்கூட்ட நோக்கத்தை எடுத்துரைத்தார்கள். அவையிலிருந்த பெரியார்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தார் ஆங்கிலக் கலாசாலைகளில் நாட்டு மொழிப் பயிற்சியின் பொருட்டுச் செய்துள்ள சிபார்சுகள் மொழிவளர்ச்சிக்கு முரண்பட்டவையாகவும், பிற்போக்கானவையாகவும் இருப்பதைக் குறித்துத் தம் கருத்துக்களை வெளியிட்டார்கள்.

பின்னர் அடியிற்கண்ட **முடிவுகள்** யாவர் ஒப்புதலுடனும் நிறைவேறின.

1. சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த ஆங்கில கலாசாலைகளில் தமிழ் கற்பிப்பவர் தமிழ் இலக்கிய இலக்கணப் புலமையுடையவராய் இருக்கவேண்டும். அன்னோர்க்குரிய ஊதியமும் சீரும் பிற ஆசிரியர்களின் ஊதியத்திற்கும் சீருக்கும் குறைவுபட்ட

வையாயிருக்கக்கூடாது. அவற்றைக் குறைவு செய்யக் கருதி வெளியிடப்பட்டுள்ள கமிஷன் அறிக்கையானது, பல்கலைக் கழகத்தாரால் ஒப்புக்கொள்ளத் தக்கதன்று.

2. மேற்குறித்த ஆங்கில கலாசாலைகளில் மொழி பெயர்ப்புக் கற்பிக்கும் ஆங்கிலப் பட்டதாரிகளும் தமிழ்ப்புலமை யுடையவராயிருத்தல் வேண்டும். அவர்கட்குத் தாய்மொழி மாத்திரம் தமிழாயிருத்தல் போதாது.

3. மொழி பெயர்ப்பு வேலை தமிழ் கற்பிக்கும் வேலையின் ஐந்தில்லொன்று அல்லது ஆறிலொன்று வேலைப்பகுதியாகக் காணப்படுதலின், அதற்குரிய ஊதியம் அவ்வேலைப்பகுதிக்குத் தக்கவாறு ஏற்படவேண்டுமே யொழிய, தமிழ்ப்பண்டிதரின் ஊதியத்திற்கும் அதிகப்படுதல் முறையன்று. கமிஷன் அறிக்கையில் மொழி பெயர்ப்புக் கற்பிக்கும் பட்டதாரியின் ஊதியத்தைத் தமிழாசிரியர்களின் ஊதியத்தினும் மிக அதிகமாக உயர்த்த வேண்டுமென்ற குறிப்பு, நடுநிலைக்கு மாறாகவும் உயர்தரத் தமிழ்க்கல்வி கற்பாருக்கு ஊக்கக்குறைவையும் தளர்ச்சியையும் விளைத்து, தமிழ்ப் பயிற்சிக்கே நாளடைவில் பெருங்கேடு பயப்பதாயுமுள்ளது.

4. இன்டர் மீடியட் பரீட்சைக்குத் தமிழ் கட்டாய பாடமாக இருத்தலால், அவ்வகுப்புக்குரிய தமிழாசிரியர்கள் தக்க தமிழ்ப்புலமை யுடையவர்களாய் இருத்தல் வேண்டும். ஆதலின் ஆங்கிலப்பட்டம் மட்டும் உடையவர்களே தமிழாசிரியர்களாயிருக்கலாமென்ற குறிப்புத் தமிழ் வளர்ச்சிக்கும், தக்க முறையில் தமிழ் போதிப்பதற்கும் இடையூறுயுள்ளது.

5. இந்தத் தீர்மானங்கள் பிற உள்நாட்டு மொழிகட்கும் ஒக்கும்.

6. சங்க அமைச்சரவர்கள் இம்முடிவுகளைப் பல்கலைக் கழகத்திற்கும் அதன் அங்கத்தினர்கட்கும், பத்திரிகைகட்கும், சங்கங்களுக்கும் அனுப்ப அனுமதிக்கப் பெறுகின்றார்கள்.

K. Subrahmaniam.